பக்கங்கள் 8.

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை சதம் 5.

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன் கிழமை தோறும் வெளி வருவது

THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Pubished Every Wednesday

"என்து கடன் பணி செய்து கிடப்பதே" "சாதி மதங்களைப் பாரோம்" "நாமார்க்கும் குடியல்லோம்"

மலர் 1. | 1928-ம் வருஷம், அக்டோபர் மீ 31உ புதன்கிழமை. | இதழ் 21.

## திருநாவுக்கரசு சுவாமிகளின் சரித்திரம்.

(வித்வான் ஆர். ஏ. பிரம்மணயகம் பிள்ளை அவர்கள் எழுதுவது.)

—0—

முன் தொடர்ச்சி

அன்புடையீர்காள்!

நந்திலகவதி யம்மையரின் மேன்மையாகிய கற்பும், தபோ நிலமையும், பகவத் கைங்கிரியமும் திடவைராக்கிய சித்தமும் கானடவில் வளர்பிறைபோல் பெருகிவரும் தம்பியாராகிய மருணீக்கியாரானவர் முற்பவ வினையினால் தமது பூரணமதியை இழக்கப் பெற்றவராகியும், காயம் நிலையற்றதென்ற எண்ணமுடையவராகியும், தமதுவாழ்நாளை எங்ஙனம் செய்து கடைத்தேறுவோமென்ற அலையுண்ட மனமுடையராகி, முறைமைய தருமாதி காரியங்களைச்செய்தமுடிக்க உன்னி தமது பெருநிதிகளை, ஆதுலர்கட்கு அறச்சாலை கட்டுவித்தும், தண்ணீர் பந்தல் தடாகமுதலின கட்டிமுடித்தும், திருவடியார்கட்குஅமுதுபடி நல்கியும், தொண்டுழியத்திடுபட்ட பெருக்கதகையார். முதுவினையை மறுக்கமுடியாதராகிய செயலை நாடி, உண்மைசமயமெது. கடவுளும்யாரோ? கடவுளென்றால் என்ன, கடவுட்கும் நமக்கும், என்னசம்மந்த மிருக்கிறது. என்ற கவலையுடையவராகி, தமது சமயநெறியை இழந்து, சமணர்களின் போதனைக்கிணங்கி ஆங்கோர புலவரால் சமணநூற்கற்பிக்கப்பட்டு மதபோதக முறைகளைத் தெளிந்தவராகிய மருணீக்கியாராகிய நம் திருநாவுக்கரசுசுவாமிகளுக்கு, சேனரென்ற பேரிட்டழைத்து வந்தார்கள். அக்காலத்தில் இவ்வழகுடைய சேனரென்ற மருணீக்கியார், தமதுகல்வி திட்பத்தாலும், அதிதீர வைராக்கியத்தாலும், பௌத்த மதத்தினர்களைவென்று, சமணமதத்தைவளப்பதற்குஎண்ணங்கொண்ட இன்னவர்க்கு சமணமதாச்சாரீகள் போதிய அன்புடையவர்களாகி, சமயகுருவின் பட்டத்தைக் கொடுக்கப்பெற்று, பன்னாட்களாக அதியேவழங்கி வந்தனர்.

இம்மகா மேதாவியாகிய மருணீக்கியாகிய சேனனென்பவர், தமது உயர்தரநெறியையும் இழந்து சிவபணிவிடைக் கருதை இல்லாதொழிந்த தற்கு, முன்வினையேயென்பதை இங்குவிளக்குவோம். இந்த மருணீக்கியாகிய சேனனென்பவரும் திருநாவுக்கரசு சுவாமிகளெனப் பேர்வரப்பெறும், வாகீசமுனிவனுனவர். நிகரிலாததபோவன்மையும், கடவுளினதிருவடிநீழ்லுறைபவருமாயிருக்கும் நால் தரம் எவ்வுயிர்களிடம் இரக்கச்சித்தமுடையவருமானபடியால், ஒருவருக்கும் இடையூறு வாராதபடி இமயமலைச்சாரலில் தவம்செய்தவரவே, இலங்கையில்புகழ்படவாழ்ந்த இராவணனுனவன் தமக்குண்டான வன்மையை இறைவனேடுங் காட்டுதற்கெண்ணி, கைலைமலைக்கருகே சென்று, உமைபங்கசமேதராகி வீற்றிருக்கும் மம்மலையை தமது இருபது தோள்களாலும் பிடு

## இந்தியத் தொழிலாளரின் நிலைமை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜண்ட், கனம் ஹைதரி அவர்களின் விரிவான ஆராய்ச்சி

பொருளாதார விஷயக் குறிப்புகள்.

(முன் தொடர்ச்சி)

சென்றவாரம், இலங்கைத் தோட்டக் காடுகளில் வேலைசெய்து காலம்கழித்துவரும் இந்தியத் தொழிலாளி அவனது குடும்பத்தாருடன் எவ்வித ஜீவியத்தை நடத்திவருகிறானென்றும் அவனது தினசரி வாழ்க்கையில் எவ்வித நிகழ்ச்சிகள் நடந்துவருகிறதென்றும் அவனுக்கும் அவனது குடும்பத்தாருக்கும் தோட்டங்களில் எத்தகைய வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறதென்றும் எடுத்துக்கூறினேம். இந்தியத் தொழிலாளரின் பொருளாதார நிலைமையைப் பற்றிமுன் கூறிய விவரங்களைத் தொடர்ந்து கனம் ஹைதரிஅவர்களின் யாதஸ்திலிருந்து இன்னும் சிலஅரிய விஷயங்களை கீழேவரைய விரும்புகிறோம்:—

"தோட்டக்காடுகளில் வசிக்கும் இந்தியத் தொழிலாளிக்கு எவ்வளவோ வசதிகள் செய்யப்படுகின்றன. அங்ஙனமிருந்தும் அவன் தோட்டத்து துரைக்கோ அல்லது கங்காணிக்கோ அல்லது கடைக்காரனுக்கோ கடன்பட்டு விடுகிறான். எப்பொழுதும் கடன்கொடுக்கவேண்டியவனுகயிருப்பது சாதாரண இயல்பாகவே அவன்கருதுகிறான். தான் மற்றவரிடமிருந்து கடன் வாங்கும் நிலைமையை எப்பொழும் தேவைப்படுகிறான். அன்னியருக்கு கடன்படுவதால் இலங்கையிலுள்ள ஓர் இந்தியத் தொழிலாளி தனது இலங்கைஜீவிதம் உற்பாகிவிட்டதாக நினைப்பதுமன்னியில்தனக்குகடனிருப்பதுவரையில் தோட்டத்தார் தன்னை வேலையிலிருந்து விலக்கி விடமாட்டாரென்றும் தனக்கு வேண்டிய சாதாரண சுகங்களுக்காகஆவது தனது உணவிற்காக ஆவது அவர், தான்வருந்தும்படி பார்த்துக்கொண்டிருக்கமாட்டாரென்றும் நம்புகிறான். இதுவரையிலும் தனது விசேஷங்களுக்கும் கலியாணங்களுக்கும் தேவையான பணம் எளிதில் கிடைத்து வந்திருக்கிறபடியால் பணம் மீதிவைக்கவேண்டுமென்ற நாட்டம் அவனுக்கு தோன்றியதேயில்லை. இந்தியாவில் நிலங்கள் வாங்குவதற்காக சில கங்காணிகள் பணம் கடன்வாங்குவதுண்மையே. ஆனல் அபூர்வமாக சிலசந்தர்ப்பங்களைத்தவிர, அவர் கடனுகவாங்கும் பணத்தை பிரயோஜனமற்றவழிகளில் செலவாக்குகின்றனர். புதியசம்பளச்சட்டம் அமுலுக்கு வரும்போது தொழிலாளிக்கு எவ்வித ஆதாரங்களையொட்டி சம்பளவிகிதங்கள் வழங்கப்படுமென என்னல் திட்டமாகச் சொல்லமுடியாது. நிதானமாக, ஒருதொழிலாளிக்கு சராசரி எவ்வளவு சம்பாதிக்க முடியுமென்று நான் கூறியிக்கிறேனே, அதைவிட வேலை நெருக்கடியான சமயங்களில் பல தொழிலாளிகள் அதிகம்சம்பாதித்திருப்பதாகதெரியவருகிறது. ஆனதுபற்றி, தோட்டத் தொழிலாளியின ஜீவியம் வரவர முன்னேற்றமடையுமென்றே நாம எதிர்பார்க்கக்கூடும். இவ்விதம் முன்னேறி வந்துள்ள தொழிலாளரும் இல்லாமலில்லை. ஆனல் தோட்டக்காடுகளிலுள்ள இந்தியத்தொழிலாளி அவன் வாழ்நாள் முழுதும் சம்பாத்தியமற்றவனுகவேயிருந்து காலத்தை முடித்துவிடுகிறான். முன்னேற்றமடைய வேண்டுமென்ற அவா இதுகாறும் அவனுக்கு தோன்றவில்லை. ஆகவே, இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளி சுகாதாரவாழ்க்கையிலீடுபட்டும் போதுமான வசதிகள் பெற்றும் உண்ணவும் உடுக்கவும் கஷ்டமின்றியிருந்தும் மனச்சமாதானத்தோடு வசித்தும் வந்திருந்தபோதிலும் அவனது வாழ்வில் கிடைத்துள்ள நற்சமயத்தையும் அனுகூலங்களையும் நன்குபயன்படுத்தாது போய்விடுவதைப்பற்றி வருந்தாமலிருக்க முடியாது."

தொழிலாளர் தங்கள் நாட்டுக்கு திரும்புவதைப்பற்றி பிரஸ்தாப யாதாஸ்தில் கூறியுள்ள சிலவிஷயங்கள் இங்கு கவனிக்கத்தக்கதாகும். தோட்டக் காடுகளிலிருக்கும் இந்தியத் தொழிலாளரை நாட்டுக்கு அனுப்புவதைப்பற்றி சில சட்டங்கள் அரசாங்கத்தாரால் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குவந்து ஒருவருஷமாவதற்கு முன் இந்தியாவிற்குப் போகவிரும்பும் தொழிலாளி முதலாவதாக இந்தியா ஏஜண்டின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். நீடித்தகாலம் இங்குதங்கியுள்ள தொழிலாளரை இச்சட்டம் பாதிக்காது. இதற்குமுன்னிருந்த இந்தியா ஏஜண்டும் லேபர்கண்டிரோலரும்செய்துகொண்ட சில உடன்பாடுகளின்பேரில் தகுந்த காரணங்களால் இந்தியாவிற்குச்செல்ல நேரிடும் தொழிலாளருக்கு இன்னல்கள் ஏற்படாமல் நிபந்தனைகள் செய்யப் பட்டிருக்கின்றன. தேசஇயல்பு ஒத்துக் கொள்ளாமலும் உற்றருக்கு பிணியேற்பட்டுவிடுவதாலும் தொழிலாளரில்பலர் நாட்டிற்கு செல்ல வேண்டியதாகிறது. உண்மையாக ஒருதொழிலாளிக்கு இலங்கையில் வசிப்பது விருப்பமில்லையானல்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்து சமய சரித்திரம்.

கலைமாணி அழகசுந்தர தேசிகர் (Rev. Francis Kingsbury B. A.) எழுதுவது.

(தொடர்ச்சி)

### 5. தமிழகச் சமய நிலை.

தமிழகமென்பது தமிழ்அகம் என்னும் இரண்டு சொற்களால்ஆகிய தொடர்மொழி. இது தமிழ் வழங்கும் நாட்டுக்குப் பழையபெயர்.

இதுவரையிலும் நாம் பார்த்தபடி, இந்துசமயநிலை, விந்திய மலைக்கு வடக்கே ஆரிய வர்த்தத்தின் சமயநிலை. இனிமேல் நாம் ஆராய்வது தமிழகத்தின் சமயநிலை. ஆரியா தென்னாட்டுக்கு வரத்தொடங்கின காலம் எதுஎன்று திட்டமாய் வரையறுக்க முடியாது. இராமர் காலத்துக்கு முன்னமே ஆரியர் சிலர் விந்திய மலையைக்கடந்து தெற்கே வந்துவிட்டனர். அவர்கள் தொகை சிறிது சிறிதாக வளர்ந்துகொண்டே வந்தது. அவர்கள்போன இடங்களிலெல்லாம் தங்கள் பாஷையையும் சமயங்களையும் நடையுடைபாவனைகளையும் நாகரீகத்தையும் பரப்பிவந்தனர். ஆகவே, கிறிஸ்துவுக்கு முன் 500 வருஷத்தில்தமிழகத்தில்ஆரியமதம், ஆரியக்கல்வி, ஆரியநாகரீகம் மிகப்பரவியிருந்தன. [தமிழகம்முழுதும் ஆரிய நாகரீகத்தால் நிரம்பிவிட்டது என்று எண்ணலாகாது. தமிழ்நாட்டிலே திராவிடமதங்களும் திராவிட நாகரீகமும் மிகப்பலத்தோடு நிற்பதை இன்றைக்கும் காணலாம்.]

கிறிஸ்துவுக்குப்பின், முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழகத்திலே சிவபக்தி, விஷ்ணுபக்தி, பௌத்தசமயம், சமணசமயம், முருகவணக்கம் முதலியன ஒன்றின்பக்கத்திலொன்றாய் விரவியிருந்தன. அக்காலத்திற் தமிழ்ச்சங்கத்துப் புலவர்கள்சிலர் சிவபத்தர், சிலர்திருமாலடியார், சிலர் பௌத்தர், சிலர் சமணர், சிலர் முருகனைவழிபடுவோர். இப்படியிருந்தும் இவர்களுக்குள்ளே இக்காலத்திலே யாதொரு பகையும் பிரிவினையும் இல்லை.

ஆயினும் இரண்டு மூன்று நூற்றாண்டு செல்லமுன், அதாவது முன்பின் கி. பி. 600வருஷத்துக்குள், பௌத்தமதமும் சமணமதமும் மிகப்பெருகி, ஹிந்துமதம் அடியோடு போய்விடும், அதன்பெயருமிராதுஎன்று சொல்லத்தக்கபடி க்ஷீணித்துவிட்டது. அக்காலத்திற்தான், தமிழகத்தில் வைஷ்ணவ ஆழ்வார்களும், சைவசமயகுரவராகிய நால்வரும் தோன்றி, நாலாயிரத்திவ்விய பிரபந்தமும் தேவார திருவாசகங்களும் பாடினர். இப்பாட்டுக்கள் தமிழகம் முழுதும் பரவவே, குற்றுயிராகிக்கிடந்த இந்து சமயத்திற்குப் புத்துயிர்வந்து, அதுபுதுப்பலம் பெற்றுச் சிறந்ததுமன்றிப் பௌத்தசமயம் இருந்தஇடமும் தெரியாமல் ஓடவும் சமண

(6-ம் பக்கம் பார்க்க)

## திருநாவுக்கரசு சுவாமிகளின் சரித்திரம்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

க்கி உயர்த்தினன். அதுகண்ட இறைவனும் இவனது அகமகிழ்ச்சியை குறைக்கவேண்டுமெனக்கருதி, தனது கால் பெருவிரலால் அம்மலையை அழுத்தினர். அதுகாலை இடையிலகப்பட்ட இராவணனனவன், நசுக்குண்டு பல்லூழிகாலம் அதினிடையே வேதனைத் தழல் சேர்ந்தது. அதுகண்ட இந்தவசி சுவமுனிவனனவர், இராவணனுடைய கொடியபாவியினிடத்து இரக்கமுற்றவராகி, அப்பா இராவணா என்னே இங்ஙனம்சேர்ந்தது நீ மகா பராக்கிரம சாலியாயினும், சர்வவல்லமையுள்ள கடவுளிடத்து உனது திறனை காட்டுவது அடாததல்லவோ? இனி சென்றினாடிப் பயனென்னை நீ இங்ஙனம் பல்லூழிகாலம் வருந்தினையன்றோ? இனியேனும் கண்ணுதற் கடவுளாகிய பரமசாம்பவனிடத்து அன்புடையவனாகி, அமிர்தகானமாகிய பண்களை சாமவேதமுறைப்படி இசைத்தகழ்துவாயெனின், உன்மீது அருள்சுரந்து ஆட்கொள்வானென்பது திடனே. ஆனதுபற்றி, இதனை செய்யமுயலுக வென்றருளி மறைந்தருளினர். இதுகேட்ட துஷ்டனாகிய இராவணன் இசைகருவிகள் தம்மிடமில்லாததுபற்றி தமது நரம்புகளை இசைக்கருவிகளாக செப்பனிட்டு, அமிர்தகானம் விண்ணளவு மொக்கிரும்படி பண்ணிசைதான் இதைக்கேட்ட உமையொருபங்கன், செவிமடுக்கலாகி, இராவணன்மீது அருளோக்குடன்வரவழைத்து அவனுக்குவேண்டுவன ஈந்துவழி செலவிடுத்தனன். பன்னாட்சென்றபின் இராவணனனவன் கண்ணுதற் கடவுளாற்பெற்ற வரங்களின் திறமையால், தேவர்களைவருத்தவும், தேவர்களதனை சகித்திடாது பரமன் திருத்தாள் வீழ்ந்து முறையிடவே! அவர்களின்பெருந்துயர்கண்டிரங்கி, இம்மாற்றஞ்செய்தகொடிய இராவணனை. உங்களிலொருவராகிய வசிசான வராலேயே செய்விக்க நேர்ந்தது. அன்றியும், துஸ்டாகளுக்குபகாரம் செய்யின் அவ்வுபகாரம் தனக்கு அபகாரமாகவே முடியும். அதுஇந்தவசிசாலேயே நிறுவினிற்கின்றது. ஆனதுபற்றி அன்னவரை பூவுலகிற் றென்னாட்டிற் பிறக்கச்செய்து எமமை யறியாத நியமசமயத்திலே ஆழ்ந்தி, தன்பிறுசயென்ற கேட்பாட்டினால் வசிசமுனிவரானவர் திருவாமூரிலே, பிறந்துமருணீக்கியெனும் நாமங்கொண்டு பின்னர் சேனரெனவும் புனைப்பெயர்தாங்கி நின்றனர். இங்ஙனம் பன்னாக சமண மதத்தை கைக்கொண்டசேனர் தமது தமக்கையாரை மறந்து பல்காலமாய்விட்டன. பின்பு திருவாமூரிலே தம்பியைப்பிரியாரிருந்த திலகவதியம்மையார், சமதுசோதரன் பிந்தமையாலும் அன்னவரின் நிப சோக்குங் கண்டிரங்கி, திருவதி கை வீரட்டானமென்னும் புண்ணிய திருப்பதியிற்சென்று. அஸ்டாங்க பஞ்சாங்கமாய்வீழ்ந்து கண்ணீர்பெருக உருகிப்பாடி எம்பியாகிய மருணீக்கியானவன் உன்னையுமென்னையும் மறந்து மறுசமயத்திலே வாழ்கின்றனன் அது என்மனம் பொறுது வருந்துகின்றேன். நீயவனுக்கருள் சுரந்து உன்னைப் பணியுமாறு செய்தருள்வாயென பன்முறை பணிந்து, அவ்வாலயத்திலே வீற்றிருந்தனன். அங்ஙனமிருக்குந் திலகவதியம்மையார் ஏவலைக்கிரியைகளாகிய நந்தவனங்கள் வைத்தலும், மலர் பறித்திடுதலும் கோமயத்தால் ஆலயத்தை சுத்திசெய்வதுமாக வாழ்நாளை கழித்து வந்தனர். இங்ஙனம் சென்றவார்த்தாளிரவுகனவில்வந்து, திலகவதியுன்துசுப்பியானவன்முற்பவத்தா லிங்ஙனமிருக்கநேர்ந்தது. இனிமேல்உன்முறைக்காய்அன்னவனுக்கு சூலைநோயைவருவித்து, உன்னைச்சாரும்படி செய்கின்றேனென்றுரைத்து மறைந்தருளினர்.

இங்ஙனம் மறைந்தருளிய பரமசிவனானவர் பாடலிபுரத்தில், சமணாச்சாரியாய் விளங்குமருணீக்கியாரென்றசேனர்க்குவயிற்றில் சூலைநோயுண்டாகுமாறு செய்வித்து வருத்திற்றார். அதனைசகிக்க முடியாதவராகி தரையில் விழுந்து துன்புறுவதைக் கண்ட சமணகுருக்கள் அதனை கண்ணுற்று, பலவாறு மந்திரோப தேசமொழிந்தும், பலவிதமருந்தளித்தும் தீராதுகண்ட சமணர்கள் தங்களாலாகாதென கைவிட்டு சென்றனர். அதுகண்ட மருணீக்கியால் பெரிது துன்புடையராகி, இனி என்செய்வது இவர்கள் நம்மை காப்பாற்றாது விடுத்தனரே. இனி எங்குசெல்வது நம சகோதரியிடம் செல்வோமென திடனுற்று, தமதுபாகனை அழைத்து [illegible] தனமது தமக்கையாரிடம் எனதுநிலைமையைசொல்லுக வென்றுரைத்து விடுத்தனன். பாகுகன் விரைந்தேகி திருவதிகை சேர்ந்தாவணர்த்திற்கண்ட திலகவதியம்மையாரிடம் அம்மணி யான் தாங்களின் தம்பியின்பாகுகன். தாங்களை அழைத்து வரும்படிசொன்னமையாலிங்கு வந்தனேன். இது கேட்ட அம்மையார் பாகுகனிடம் தம்பியின் நிலைமையைகேட்டு வருந்தி யானங்குவருதல் நீதியில்லை. அவன் அருகசமயத்தினன் அம்மடத்திலும்மிதியேன் போவெனகடிந்து செல்கவிடுத்தனன். பாகுகன் அன்னவரின் கருத்தை வெளியாடவும் இனிநாம் இவ்விடமிருக்க் துணியின் ஆவிதுறப்போம் இன்னுளிறதியாக அருகசமயத்தை கையாடி தற்குநமக்குக்கிடைத்தபலன் இன்னேயே யென்றுன்னதவராகி, திருவதிகைவிரட்டான மெய்திதமது சோதரியின் திருப்பாதக மலங்களிலசவிழுந்து கைகூப்பி கண்ணீர்மல்க என்னுடன் பிறந்த தமக்காய்! யானறிவீனனாகி உன்னைப்பிரிந்து அருகசமயத்தைநாடி அறிவிழந்துவிட்டேன்! அடியேனை யினியாதரித்தருளுவீரெனபணிந்ததம்பியை இருகரங்களாலும் எடுத்து தம்பிஉனது சிற்றறிவினாலும், கடவுளின் செயலினாலும், இங்ஙனம் விடியும்படிநேர்ந்து. இனியாவது அரனிசத்வடிப்பொருளை வணங்குக வென்றருள்னர். அதுகேட்ட மருணீக்கியார் தமக்கையாரின் உபதேசவாக்கை நினைந்து சைவமார்க்கமே தலையாயிலங்குவது அன்நெறியை கடைப்பிடித்தொழுமாறு திடங்கொண்டு, திருநீறணிந்து பஞ்சாக்ஷர வுபதேசத்தைப்பெற்று, மறுநாள் திருபள்ளி யெழுச்சிக்கு திருவாலயம் சென்று நித்திய கர்மாதிகளை முடித்து திருவாயினின்றுவாய்விட்டலறி அய்யனே? அடியேனை யாண்டருளும் கருணைமாக்கடலே! யென்றஇசையோடு தன்னையறியாது கண்ணீர் ததும்பி விழவும், மையர்சிலுர்த்து கைகூப்பி சிரமேற்றி,

கூற்றுயினிவாறு விலக்ககலீர் கொடுமை
பலசெய்தன நானறியேன்
எற்றுயடிக்கே யிரவும்பகலும் பிரியாது
வணங்குவ னெப்பொழுதும்.
தோற்று தென்வயிறினகம் படியேகுடரோடு வடக்கிமுடக்கிட
வாறநேனடியேன் திக்கேடில வீரட்
டானத்துறை யம்மானே.
நெஞ்சமுமக்கே யிடமாக வைத்தேனியா
தொருபோது மிருந்தறியேன்
வஞ்சகமீது வொப்பமிது கண்டறியேன்
வயற்றேடு தொடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நனு
காமற் றுரந்து கரந்துமிட
ரஞ்சேலு மென்னீரதிகைக் கேடில வீரட்
டானத்துறை யம்மானே.
முன்னமட யேனறியாமையினுன் முனிந்
தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடியே னுமக்காளும் பட்டேன்
சுடுகின்றது சூலைதவிர்களீர்
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றே
தலையாயவர் தங்கடனாவது தா
ரன்ன நடையாரதிகைக் கேடில வீரட்
டானத்துறை யம்மானே.
சலம் பூவோடு தூபமறந் தறியேன் றமி
ழோடிசை பாடன் மறந்தறியோ
நலந்தீங்கிலு முன்னைமறந்தறியே னுன்
னும மென்னாவின மறந்தறியே
னுலந்தார் வலுயிர்ப்பலிகொண்டுழ வாயு
டலுள்ளுறுசூலை தவிர்தருளா
யலர்தேனடியே னதிகைக்கேடில வீரட்
டானத்துறை யம்மானே

யென்ற திருபாடல்களை பண்ணிசைத்துப் பாடி உருக்காய திருமுறைச் செப்பலை விண்ணயாக கண்ணுதற் கடவுளார் இவர் மாட்டிரங்கி கருணைகூர்ந்து அன்புடை திருநாவுக்கரசேயென்ற அசரீரிகேட்க உளமகிழ்ந்து திருவதிகை விரட்டானத்து பல பாடலைபாடி தமக்கையாருடனிருந்தனர்.

(தொடரும்)

---

## மஜிஸ்டிரேட்டுகளும் தோட்டத் தொழிலாளரும்.

—0—

பதுளை போலீஸ் கோர்ட்டாருக்கு விண்ணப்பங்கள்.

---

விஷயத்தின் விவரம்.

சென்ற சட்டசபைக் கூட்டத்தில் ஸ்ரீமான்கௌரவநடேசய்யர் கீழ்கண்டகேள்விகளை சபையின்கண் ஆஜர்செய்ததாகத் தெரிகிறது:—

(1) 1927-ம்வருஷத்திலும 1928-ம் வருஷம் ஜனவரிமுதல ஜூலைவரையிலும் தோட்டத்தொழிலாளர் தங்கள் துரைகள் மீது பராதிபபட்டு பதுளை போலீஸ் மஜிஸ்டிரேட்டில்எத்தனைவிண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள்?

(2) அவைகளில் எத்தனை விண்ணப்பங்கள் தோட்ட முதலாளிகளின் பார்வைக்கு அனுப்பப்பட்டது? அதன்பேரில் மஜிஸ்டிரேட் என்னவென்ன நடவடிக்கைகள் செய்திருக்கிறார்?

(3) அதே காலவரைக்குள்ளாக, தங்கள் தொழிலாளரைப்பற்றி தோட்டமுதலாளிகள் கொடுத்துள்ள பராதி விண்ணப்பங்கள்எத்தனை?

(4) அங்ஙனம் பராதிப்பட்ட நபர்களில் எத்தனைபேர் விண்ணப்பத்தை பின்வலித்துக் கொண்டார்கள்? எத்தனைபேர்கள் அவ்வாறுசெய்ய மறுத்தனர்?

(5) தொழிலாளரைப்பற்றிக் கொண்டுவரப்பட்ட பராதிகளில் அவர்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது?

மேல்குறித்த கேள்விகளுக்கு கவர்ன்மென்டார் கீழ்கண்டவாறு பதிலளித்தனர்:—

(1) 128.

(2) (எ) 108 விண்ணப்பங்கள் தோட்ட முதலாளிகளுக்கு அனுப்பப்பட்டன. (பி) இவ்வித விண்ணப்பங்களுக்குமஜிஸ்டிரேட்டால் நடவடிக்கைகள் ஒன்றும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பதுளை போலீஸ் மஜிஸ்டிரேட் கீழ்வருமாறு கூறியுள்ளார்:—

குடியேற்ற நாடுகளிலுள்ள சட்டமுறைகளின்படி மஜிஸ்டிரேட்டிற்கு விண்ணப்பித்துக் கொள்ளுதல் ஓர் பொருத்தமான செயலல்ல. சரியாக க்கூறமிடத்து, ஓர் விண்ணப்பத்தின்பேரில் நடவடிக்கை யெடுத்துக் கொள்வது நீதிநியாய உத்தியோகஸ்தரின் வேலையாகாது. அவ்வாறு விண்ணப்பங்களைக் கவனித்து தக்கநடவடிக்கை செய்வது அரசாங்க முறைகளில் ஒன்றாகும். அரசாங்கபதவிகளிலும் நீதிநியாய பதவிகளிலுமுள்ள உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் ஸிவில் உத்தியோகஸ்தர்களானபடியால் இவ்வித அலுவல்களும் மஜிஸ்டிரேட்டின் அலுவல்களாகவே கருதுவது வழக்கமாய் விட்டது. ஆகவே, தோட்டங்களிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை கவனிப்பது கிரிமினல் சட்டங்களுக்குட்படாத காரியமாதலால் அவைகளின்மீது நடவடிக்கையெடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்வது நியாயமேயாகும். தோட்டங்களிலிருந்துவரும் விண்ணப்பங்களை முதலாளிகளுக்கே யனுப்பிவிட்டு அவர்களை கொண்டே வேண்டியவற்றைச் செய்யவற்புறுத்துவதால் விண்ணப்பங்களின் உண்மை கோரிக்கைகள் நிறைவேறி விடுகின்றன.

(3) 17.

(4) (எ) 2.

(பி) ஒன்றுமில்லை.

(5) ஒருசமயம், உத்தரவளிக்கப்படவில்லை. இதைப்பற்றி போலீஸ்மஜிஸ்டிரேட் கூறுவதாவது:—

"நான் இல்லாமலிருந்த பொழுது, 72-வது சட்டபிரிவினையின்படி குற்றவாளியென ஒருவரை நிரூபிக்காமலே சட்டநடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. குற்றத்தை நிரூபணம் செய்யவேண்டுமெனக் கேட்டபொழுது ஓர் பொய் வழக்கை உண்டுபண்ணிவிட்டார். விசாரணைக்குபின், வழக்குதப்பிதமெனக்கண்டால் அவன் தண்டிக்கப்படுவான் என்று எச்சரிக்கைசெய்யப் பட்டது. நாளடைவில் எதிரிகள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டு விசாரணைதினமும் குறிப்பிடப்பட்டது. அந்ததினத்திலும் பராதிப் பட்டவர் கோர்ட்டிற்கு வராமல் கோர்ட்டாரின் அதிகாரத்தை அலக்ஷியமாக எண்ணி நடந்து கொண்டார். நான் அவரை பிடித்துக் கொண்டுவரும்படியாக ஓர் வாரண்டை அனுப்பியுள்ளேன்."

---

# கடிதங்கள்

## சிலாபத்தில் சுகாதாரத்தடைவு.

---

இலங்கை இந்தியன்

பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா,

சிலாபம் பொதுஜனங்கள் நன்மையைக்கருதி பள்ளிவாசலில் தொழுகைக்குப் போகிற ஜனங்களுக்கு துற்நாற்றமுள்ள கக்கூஸ் சாக்கடை தண்ணீரால்சகிக்ககூடாத ஆயாசத்தைவிட்டு கடைத்தெருஜனங்கள் கஷ்டப்படுகிறவிஷயமாக தங்கள்நேத்திரம்போன்ற "இலங்கை இந்தியனால்" பிரசரம்செய்யும்படி கேட்டுக் கொண்டேனல்லவா?

இப்போது தங்களை திரும்பவும் கேட்டுக்கொள்வது, காருண்யம் தங்கிய கௌரமிஸ்டர் மார்ட்டின் துரைஅவர்களுக்கு அறிவிக்கும்படி தயவாக கேட்டுக்கொள்வது என்னவென்றால், பொதுஜனங்கள் நன்மையைக் கைக்கொண்டிருக்கும் லோக்கல் போர்டு சேயாமென் அவர்கள் கிருபைசெய்து கடைத்தெரு பள்ளிவாசலுக்கு பக்கத்திலிருக்கும் கக்கூஸை நேரில்வந்து பார்வையிட்டு அதனால் சகல முஸ்லீம்களுக்கும் சாக்கடைதண்ணீர் பள்ளிஅருகில் ஓடும்போது வணக்கத்துக்கு போகிறவர்களுக்கு துர்நாற்றமேற்படகூடியது உண்மைதானென்று தெரிந்துகுறித்த கக்கூஸை மறுஇடங்களில் மாற்றும்படி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். இது விஷயமாக முன்நடந்த கறஸ்பாண்டன்ஸ் முடிவுசெய்யாமல் இருந்தாலும்சரி அல்லது முடிவுசெய்யப்பட்டுவிட்டாலும்சரி, இப்போது சிலாபம் கடைத்தெருவு முஸ்லீம்கள வருந்துவதாலும் நான்நேரில் பார்த்தபோது அந்தக்கக்கூஸ் எடுத்து மறுபுறம்வைப்பது நியாயம் எனத்தோன்றியதால் பிரசுரம் செய்யும்படி கேட்டுகொண்டேன். மேலும் அதுவிஷயமாக சகலரும் ஒன்றுசேர்ந்தோ அல்லதுமுக்கியமானவர்கள் தனிமையாகவோ கௌண்ஸிலுள்ள சேயர்மென் அவர்களை கூட்டிக்கொண்டுவந்து காட்டியிருந்தால்அவர்கள் அப்புறப்படுத்தி யிருப்பார்கள். அதுவிஷயத்தை அடிக்கடி ஞாபகப்படுத்துவது நியாயமெனக்கருதி நான் இப்போது ஞாபகப்படுத்தலானேன்.

ஆனதால் கருணையும், நீதியும், பொது நன்மையையும் நோக்க் கொண்டிருக்கும் சேயாமென் அவர்கள் பரிபூரண கிருபைகூர்ந்து குறித்த கக்கூஸை வேறுஇடத்தில் போடும்படி தயவாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேணும்தங்கள் உண்மையுள்ளஊழியன்
O. L. S. A.மரைக்கார்
தேவிபட்டணம்
மாஜியூனியன் சேர்மென்.

கொழும்பு
118 பேங்ஷால்தெரு
25—10—28

# இந்தியச் செய்திகள்

## அகிலஇந்தியக் காங்கிரஸ் கமிட்டி.

டில்லி காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியான லாலா சங்கரலால் டில்லியில் நவம்பர் மாதத்தில் நடக்கவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கும் சர்வகக்ஷி மகாநாட்டின் அரசியல் சப்கமிட்டி கூட்டத்திற்கும் சுயேச்சைசங்க ஊழியர் கூட்டத்திற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவரும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவிலுள்ள முக்கியமான தலைவர்களெல்லாம் இக்கூட்டங்களுக்கு வந்து முக்கிய விஷயங்களைப்பற்றிய விவாதங்களில் கலந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சபர்மதி ஆச்ரமம்.

சபர்மதியிலுள்ள மகாத்மா காந்தியின் சத்தியாக்ரஹ ஆச்ரமத்தின் சட்டதிட்டங்களிலும் வாழ்க்கை முறையிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மகாத்மாஜீ சுயநலமற்ற தேசிய ஊழியத்திற்குஇந்தியர்களைத் தயார்செய்வதற்காகவே இந்த ஆச்ரமத்தை ஏற்படுத்தியுள்ளார். தேசிய ஊழியருக்கு கண்டிப்பான நல்லொழுக்கங்கள் இருக்கவேண்டுமென்பதும் அவர் பிரம்மச்சாரியாகவிருக்க வேண்டிய தவசியமென்பதும் அவருடைய முக்கிய கொள்கைகளாகும். ஆசாம வாழ்க்கை புதிதாகவுள்ளவர்களுக்கு ஏற்காதென்றும் அங்குள்ளவர்களுக்கும் அதுபற்றி வெறுப்பேற்பட்டு விட்டதென்றும் அறிந்த மகாத்மாஜீ ஆச்ரம விஷயங்களைப்பற்றி விசாரணை செய்ய ஒருகமிட்டியை நியமித்தார். அக்கமிட்டியார் பூரணமாக ஆராய்ச்சிசெய்து தற்பொழுதுள்ள நிர்ப்பந்தங்களில் சிலவற்றைத் தளர்த்தவேண்டுவது அவசியமென்று சிபார்சு செய்தார்கள். அவர்களுடைய சிபார்சுகள் ஏற்கப்பட்டதாகவும் அதுபற்றி சிலபுதிய சீர்திருத்தங்கள் செய்யப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

## ஸைமன் கமிஷன்.

இந்தியாவின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் மிகப்பெரிய வேலையை நடத்துவதாக இங்குவந்துள்ள ஸைமன்கமிஷன் இதுகாறும் ஐரோப்பியர்களான சில பம்பாய் அரசாங்க பிரதம உத்தியோகஸ்தர்களை விசாரணை செய்திருக்கின்றனர். இவர்கள் கூறியுள்ள சாக்ஷிய முழுவதும் உத்தியோகப் பற்றையும் சுயநலத்தையும் ஜாதித் துவேஷத்தையுமே வெளியாக்குகின்றது. பம்பாய் மாகாணத்தில் பகிரங்கமாக விசாரிக்கவேண்டியிருந்த சாட்சிகளின் விசாரணை இன்றோடு முடிவுபெற்றது. இனிக்கமிஷன் பம்பாய் கவர்ன்மெண்ட் மெம்பர்களையும் மந்திரிகளையும் அந்தரங்கமாக விசாரிக்குமென்றும் அரசியலில் செய்யவேண்டிய மாறுதல்கள் சம்பந்தமாக பம்பாய் கவர்ன்மெண்டார் கூறக்கூடிய நிர்மாண யோசனைகளைப்பற்றி அவர்கள் சாட்சியம் கொடுப்பார்களென்றும் தெரிகிறது.

## தொழிலாளர் வேலைநிறுத்தம்.

ஆமதபாத்திலுள்ள பெல்சார் லஷ்காரியில், பாத்லக்ஷுமி பருத்திமில் இவற்றைச் சேர்ந்த தொழிலாளர்கள் சென்ற சிலதினங்களாக வேலைநிறுத்தம் செய்துவிட்டதாகத் தெரிகிறது. தொழிலாளர்சங்க மேற்படுவதைத் தடுப்பதற்காக அதில் சேர்த்தைகொண்டவர்களை அதிகாரிகள் வேலையைவிட்டு தள்ளினதே வேலைநிறுத்தத்திற்கு காரணமாகும். புதிய தொழிலாளர்களின் உதவியைக்கொண்டு மில்கள் வேலைசெய்ய முயன்று வருகின்றன.

## வெள்ளச் சேதம்.

சென்னை மாகாணத்தில் கீழ் சமுத்திரக்கரையோரத்தில் சென்ற சிலதினங்களாகப் பெய்த கனத்த மழையினால் மிகுந்த சேதமேற்பட்டிருப்பதாகவும் அந்தப்பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்கு மிகுந்தகஷ்டமேற்பட்டிருப்பதாகவும் செய்திகளெட்டுகின்றது. இம்மழை காரணமாக சென்னை கல்கத்தா ரயில்பாதை பல இடங்களில் சேதமடைந்திருக்கிறதாகவும் ரயில்பாதை ஜலத்தில் மூழ்கியிருப்பதுமன்றி ஏழுபாலங்கள் அடித்துக்கொண்டு போகப் பட்டதாகவும் தெரிகிறது.

## திலகர் உருவச்சிலை.

சென்றவாரம் டாக்டர் அன்ஸாரி திலகரின் உருவச்சிலையொன்றை நாகபுரியில் திறந்து வைத்தார்.

## புதிய இந்தியா மந்திரி.

இந்தியா மந்திரிப் பதவியிலிருந்து விலகிய பர்கன்ஹெட் பிரபுவுக்குப் பதிலாக பீல் பிரபு நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார். இச்செய்தி சிலதேசியவாதிகளுக்கு சந்தோஷத்தை யளிக்கக்கூடும். ஆனால், பர்க்கென்ஹெட் பிரபு பத்திரிகா உலகத்திலிருந்துகொண்டு யின்னும்பல கெடுதல்களைச்செய்யக்கூடுமென்பதை அவர்கள் உணரவேண்டும். தற்கால இந்திய நிலைமையைக்கருதி பார்த்தால், பர்கன்ஹெட் பிரபுவைவிட இவர் சற்று நல்லவரெனவே கூறலாம். கன்ஸர்வெட்டிவ் கக்ஷியினராகிய பீல் பிரபு தேசமுன்னேற்றத்துக்குப் பாதகமாகவோ சாதகமாகவோ ஒன்றும்செய்யப்போவதில்லை என்பது திண்ணம்.

## உதவி உத்தியோகஸ்தர்.

இந்தியாவிலுள்ள மாகாண கவர்ன்மெண்டுகளின் வரவு செலவிலும் மத்திய கவர்ன்மெண்டில் வரவுசெலவிலும்சம்பந்தப்படாத ஒருபிரிட்டிஷ் வரவுசெலவு நிபுணரை தனக்கு ஆலோசனை கூறுபவராக நியமித்துக்கொள்ள ஸைமன் கமிஷன் யோசனை செய்திருப்பதாகத் தெரிகிறது. "எக்கானமிஸ்ட்" என்ற பத்திரிகையின் ஆசிரியரை அப்பதவியை ஏற்கும்படி கேட்கலாமென்றும் தெரிகிறது.

## கொச்சியில் டாக்டர் பெஸன்டு.

சென்ற செவ்வாய்க் கிழமை டாக்டர் பெஸண்டு கொச்சியிலுள்ள மஹாராஜா காலேஜ் மாணவர்களால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார். இந்தியாவின் விடுதலைக்காக பல நாளாக டாக்டர் பெஸண்டு போராடி வருவதைப் பாராட்டி மாணவர்கள் அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தனர். டாக்டர் பெஸண்டு அதற்கு பதிலளிக்கையில் தீண்டாமையைப்பற்றிப் பேசியபின் சமஸ்தானத்தை இன்னும் நன்கு அபிவிருத்திசெய்ய மாணவர்கள் பாடுபட வேண்டுமென்று குறிப்பிட்டு விரிவாகப் பேசினர்

## புதுக்கோட்டை வார்சு பாத்தியதை.

புதுக்கோட்டை சமஸ்தான வார்சுபாத்தியதை விஷயம் ஏறக்குறைய முடிவுசெய்ய பட்டுவிட்டதாகத் தற்பொழுது தெரிகிறது. சமீபத்தில் இதுசம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்டின் அறிக்கை வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

## மௌலானா முகம்மதலி.

மௌலானா முகம்மதலிபாரிஸ் நகருக்குப் போய்விட்டதாக லண்டனிலிருந்து வந்த செய்தி தெரிவிக்கிறது. அடுத்த டிஸம்பர் மாதத்தில் அவர் இந்தியாவுக்குத் திரும்பி வருமுன் துருக்கி, எகிப்து, மெஸபொடோமிய ஆகிய தேசங்களுக்குப் போவாரென்று தெரிகிறது.

(6 ம்—பக்கம் பார்க்க)

# இலங்கைச் செய்திகள்

## நோட்டீஸ் கொடாமல் வேலை விடலாமா?

### ஸுப்ரீம் கோர்ட்டில் ஓர் முக்கிய தீர்மானம்

தோட்டத் தொழிலாளர்கள் முன் அறிக்கையன்றி திடீரென வேலையைவிட்டு அகலும் காலத்தில் அவர்களுக்கு வேலையிலிருந்து நீங்கும்வரைக்குமுள்ள சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமா என்பதுபற்றி சிலதினங்களுக்கு முன்னால் ரத்னபுரிக் கோர்ட்டில் நடந்துவந்த வழக்கின் அப்பீலொன்று இங்குள்ள சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்டிருந்தது. அவ்வழக்கில் நேற்றைதினம் ஜட்ஜ் ட்ரீபெர்க் அவர்களால் தீர்ப்புக் கூறப்பட்டது.

பான மின்னஎன்னும் தோட்டத்தில் ஹெட் கங்காணியாக விருக்கும் வீரபத்திரன் என்பவன் தனக்கும் தன்னைச்சேர்ந்த 50 தொழிலாளர்களுக்கும் வரவேண்டிய சென்றவருஷம் ஜூன்மாதத்து சம்பளத்துக்காக இக்கரில்லா தோட்ட உடமஸ்தர்களின்பேரில் வழக்கொன்றை கொடுத்ததாகவும் ஜூன்மாதம் முதற்தேதியன்று தோட்ட சூப்பிரண்டுக்கு ஓர் முன்னறிக்கை கொடுத்தானென்றும் அதேமாதம் 30-ம் தேதி வேலையை விட்டு வெளியேறினதாகவும் வாதிகள் கூறினர்கள். பிரதிகளான தோட்ட உடமஸ்தர்கள் இவ்வித முன்னறிக்கை யொன்றுமே கொடுக்கப்படவில்லை யென்று வாதித்தனர். கங்காணியும் தொழிலாளிகளும் சேர்ந்து ஜூன் மாதம் இறுதிவரை 211 ரூபாய் 4 சதமளவுக்கு வேலை செய்திருப்பதாக தோட்டக்காரர் ஒப்புக்கொண்டார்கள். ஆயினும் சட்டமனுசரித்து வேலையொப்பந்த காலம் முடிவடையாததால் மீதிசம்பளம் கொடுக்கப்பட மாட்டாதென்று வாதித்தார்கள். கீழ்க்கோர்ட்டு நீதிமான் முன்னறிவிப்புக் கொடுக்கவில்லையென்று நிரூபித்தாலும் கங்காணிக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளருக்கும் அவர்வேலைசெய்த நாள்களுக்குள்ளசம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பை வெளியிட்டார்.

இந்ததீர்ப்பின் பேரில் தோட்டஉடமஸ்தர்கள் அப்பீல்செய்து கொண்டனர். அப்பீல் வழக்கில்மிஸ்டர்N. E. வீரசூரியா தோட்டக்காரர்களுக்காவும் மிஸ்டர் K. சத்தியவாகீசுவரய்யர் இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜெண்டுக்காகவும் வாதித்தார்கள். வழக்கு விசாரணைக்கு வைக்கப்பட்ட முதற்தினத்தன்று வாதிகளான கங்காணி, தொழிலாளர் இவர்கள் சார்பாக வாதிப்பதற்கு எவரும் நியமிக்கப்படவில்லை. ஆகவே, கங்காணிக்காகவும் தொழிலாளருக்காகவும் வாதிப்பதற்கென அட்வகேட் ஒருவரை நியமிக்கும்பொருட்டு ஸுப்ரீம்கோர்ட்டார் கவர்ன்மெண்ட் ஏஜண்ட் அவர்களுக்குஓர் நோட்டீஸை அனுப்பினர்கள். அதன்பேரில் அப்பீல் வழக்கில் வாதிகள் சார்பாக வாதிப்பதற்கு மிஸ்டர் K. சத்தியவாகீசுவரய்யர் நியமிக்கப்பட்டனர்.

கடேசியாக, அப்பீல் தள்ளப்பட்டு கங்காணியும் தொழிலாளரும் வேலைபார்த்த நாள் வரைக்குமுள்ள சம்பளம்அவருக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று தொழிலாளருக்கனுகூலமாக தீர்ப்புக்கூறப்பட்டது.

இத்தீர்ப்பில் தொழிலாளரும் கங்காணிகளும் அவசியமறிந்திருக்க வேண்டிய பலமுக்கிய விஷயங்கள் கூறப்பட்டிருப்பதால் தீர்ப்பின் முழு மொழிபெயர்ப்பை அடுத்த இதழில் வெளியிட உத்தேசித்துள்ளோம்.

## உண்டியல் வழக்கு.

கொழும்பு செட்டித்தெருவில் 159-ம் நம்பரிலுள்ள O. A. P. R. M. A. R. அடைக்கப்பச் செட்டியார் அவர்கள் இந்நகரில் பிரபல பாங்கர்களான தோமாஸ்குக் அன்ஸ் கம்பெனியார் பேரில் தொடர்ந்திருந்த வழக்கு சென்ற வியாழக்கிழமையன்று கொழும்பு முதல் அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் கனம் க்ரெட்ஸர் முன்பாக விசாரணைக்கு வந்தது. தாங்கள் 170,000 ரூபாய்க்கு வரைந்தனுப்பிய நாலு உண்டியல்கள் டப்ளின் அன் கம்பெனி யாரால் ஆஜராக்கப்பட்டு பணம் பெற்றுக்கொள்ளப் பட்டதாகவும் ஆகையால் அந்தப் பணமும் அதன் வட்டியுமாக தங்களுக்கு முழுத்தொகையையும் செலுத்திவிட வேண்டுமென்பதாகவும் தான் வாதிகள் கொடுத்திருக்கும் வழக்கின் சாரமாகும். வாதிகளுக்காக ஸ்ரீமான்களான J. A. பெரைரா, ஆல்பர்ட் E. பெரைரா, முதலியோரும் பிரதிகளுக்காக H. H. பர்த்தால்மன், J. R. V. பெர்டினன்ஸ் ஆகியவர்களும் ஆஜராயினர். இவ்வழக்கில் பலர் சாட்சியங் கொடுப்பாரென்றும் ஹியரிங்கு நடந்து வருவதாகவும் தெரிகிறது.

## கவர்னரின் அதிகாரங்கள்.

டொனமூர் கமிஷனர்கள் கவர்னருக்கு அளித்திருக்கும் அதிகாரங்களைக் கண்டித்து இலங்கைச் சட்டசபை சில தீர்மானங்களை நிறைவேற்றி யிருப்பதாக அறிகிறோம். மிஸ்டர் ஜார்ஜ் ரெனண்போன்ற சில அங்கத்தினர்கள் கமிஷனர்களின் சிபார்சுகளைத் தாங்கிப்பேசி ஆதரித்த போதிலும் அங்கத்தினர்களில் பலரும் அவர்கள் அபிப்பிராயத்தை உள்ளவாறே கூறிவிட்டனர். இவ்விஷயத்தில் பொது ஜனங்களுடைய அபிப்பிராயம் இன்னதென்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டது. புதிய அரசியல் திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவரும் காலத்தில் ஏற்கனவே கவர்னருக்கிருந்துவரும் அதிகாரங்கள் போதாமலாகிவிடுவதின் ரகசியமின்னதென்பது விளங்கவில்லை யென்றும் கமிஷனர்களால் சிபார்சு செய்யப்பட்டுள்ளபடி அதிகாரங்கள் கவர்னருக்கு வழங்கப்படுவதால் பெரும இன்னல்கள் விளையக்கூடுமென்றும் கூறப்பட்டது. புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஓர் சட்டத்தை அங்கீகரிக்காமல் தள்ளிவிடும் அதிகாரம் கவர்னருக்கிருப்பது தவறென்றும் பொறுப்பு வாய்ந்த அரசியலமைப்பிற்காக நாட்டைதயாரிக்கும் புதிய முறையில் கவர்னர் சில தேவையற்ற அதிகாரங்களை வைத்திப்பது தகுதியற்றதென்றும் சட்டசபையில் அங்கீகாரம் பெற்ற ஓர் தீர்மானம் சட்டமாவதற்கு முன்கவர்னரின் அனுமதிபெற்றிருக்க வேண்டுமென்பது நியாயமற்றதென்றும் சட்டசபையின் அனுமதி யன்றி சட்டங்களை தவேனும தயாரிக்கும் அதிகாரம் ஒழுங்கான தல்லவென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கமிட்டி அரசாங்கமுறைக் கண்டனம்.

டொனமூர் கமிஷனர்களின் சிபார்சுகளைப்பற்றி விவாதம் நடக்கையில் கமிட்டி ஏற்பாட்டினால் அரசாங்கம் நடத்தும் முறையைக் கண்டித்து சட்டசபையில் சென்ற வியாழனன்று ஓர் தீர்மானங் கொண்டுவரப் பட்டது. அரசாங்க சபையால் நியமனம் பெற்ற ஓர் நிர்வாகக் கமிட்டியாரைக் கொண்டு அரசாங்கத்தை நடத்தும் முறையை ஜனங்கள் அங்கீகரிக்க வில்லையென்றும் அம்முறையால் தற்பொழுதிருக்கும் நிலைமையில் தேசத்திற்கு பாதகமே ஏற்படுமென்றும் தீர்மானத்தில் கூறப்பட்டது. அரசியல் சபை, அரசாங்க சட்டசபை என்னும் இரு சபைகளை நியமிக்கும் யோசனையைக் கண்டித்து வேறொரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது.

# இலங்கை இந்தியன்.

1928-ஞ அக்டோபர் மீ 31உ

## இந்தியரின் வாக்குரிமை பிரச்னை—2

இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு ராஜ்யவிஷயங்களில் சுதந்திரமளிக்கும் பிரச்னைக்கெதிரிடையாக இலங்கையர்களில்பெரும்பாலரும்கொண்டுள்ள விபரீத அபிப்பிராயங்களையும் தங்கள் அபிப்பிராயங்களை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் அவ்வப்போது செய்துவரும் பிரயத்தினங்களையும்பற்றிநாம்பல தடவைகளிலும்வரைந்திருக்கின்றோம். இவ்விஷயமாக சென்ற சட்டசபைக்கூட்டத்தில் விவாதங்கள்பலநடைபெற்றுவந்ததை யாவருமறிவார்கள். அவ்விவாதங்களின் உள்கருத்தை ஆழ்ந்து கவனிக்குங்கால் இந்தியரின் வாக்குரிமைப் பிரச்னையைப்பற்றி இலங்கையர்கள் எவ்வித அலக்ஷியத்துடனிருந்து வருகிறார்களென்பது நன்கு புலனாகும். தங்கள் அபிப்பிராயத்தை ஸ்தாபிக்கும்பொருட்டாகவே சிங்களவர்களின் ஆதிக்கம்பெற்ற பலதேசிய மகாசபைகளும் முன்னமே தீர்மானங்கள் சிலநிறைவேற்றி தாங்கள் கூறுவது பொதுமக்களின் அபிப்பிராயமென மற்றவர்களை ஏமாற்றஎண்ணி, அதற்குவேண்டிய முன்கருதல்களை செய்துகொண்டனர். இந்தியர்களின் வாக்குரிமைப்பிரச்னைக்கு பாதகமாக சட்டசபையில் விளங்கும் மேதாவிகளுள் மிஸ்டர் மொல்லமுறே என்பவர் முக்கியஸ்தரவர். இந்தியத் தொழிலாளிக்கு ஓட்டுரிமை வழங்கக்கூடாதென்பதே அவரது அந்தரங்க கொள்கை. இதற்கு இலங்கைத் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலைபுரிவதற்கு இலங்கைமுதலாளிகள் தேவைப்படுவது காசரி கூலிகளைய நிக இந்தியரல்லவென்றும் இந்தியக்கூலிக்காரர்களையே அவர்கள் தேவைப்படுகிறார்களென்றும் காரணமாக எடுத்துக்கூறினர். ஆனால்இந்தியக்கூலிக்காரர்கள் தங்கும் குடிசைகளுக்குச் சென்று அவர்களிடம் தங்களுக்காக வாக்களிக்கும்படி கேட்பதும் இலங்கை முதலாளிகளுக்கு சங்கடமாயிருக்குமா என்று அவர்களைகேட்க விரும்புகிறோம். இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் அடிமைகளென்றும் அவர் அடிமைகளாகவேயிருந்துவரவேண்டுமென்றும் சித்தாந்தம் செய்யும் ஒருவரை தமது கொள்கைகளுக்கு மூலாதாரமாக மிஸ்டர் மொல்லமுறே கைக்கொண்டிருக்கின்றார்.நிற்க. கமிஷனர்களால் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப்பூர்த்திசெய்து ஓட்டுரிமை பெறக்கூடிய இந்தியர்கள்மிகவும் சிறுதொகையினரே என்பதைநாம் பன்முறை வற்புறுத்தியுள்ளோம். ஆகவே, இலங்கையர்கள் அதுபற்றி கவலைப்படுவதுவீண் கவலையேயாகும்.

முடிவாக கௌரவ.ஜெயா அவர்கள் இந்தியத் தொழிலாளருக்காகப் பரிந்து பேசியுள்ளமொழிகளை இந்தியர்களனைவரும் ஆதரிப்பார்களென்றேநம்புகிறோம். நமது இந்தியப்பிரதிநிதிகள் இருவரும் கௌரவ. ஜெயா அவர்கள கூறியவற்றைப்பின்பற்றிவாக்குரிமை விஷயத்தில் இந்தியர்களின் மதிப்பைக் காப்பாற்ற முயலுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## சட்டசபையிலும் மதியற்ற கேள்வியா?

பதுளை போலீஸ் மஜிஸ்டிரேட்டருக்கு தோட்டத்தொழிலாளராலும் தோட்ட உடமஸ்தர்களாலும் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை அவர் எவ்விதம் பைசல் செய்தார் என்பது பற்றி சென்றவெள்ளியன்று கூடிய சட்டசபைக்கூட்டத்தில் ஸ்ரீமான் கௌரவ. நடேசய்யர் சிலகேள்விகளைக் கேட்டிருக்கிறார். அக்கேள்விகளையும் அவற்றிற்கு கவர்ன்மென்டார் அளித்துள்ள பதிலையும் மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். இவ்விதகேள்விகளை சட்டசபையில் கேட்கும்படியாக கௌரவ அங்கத்தினரைதூண்டிய அவரது பெயர்பெற்ற புத்திசாதுர்யத்தைப் பற்றி என்னென்று கூறுவது.! தனக்குப் போதியளவு ஞானமில்லாத ஓர்விஷயத்தைப்பற்றி அங்கத்தினர் ஒருவர் சட்டசபையில் பேசுவதால் அவருடைய மதியீனமும் கவர்ன்மென்டார் அன்னவரைப்பற்றி நினைத்துள்ள அபிப்பிராயமும் வெளியாய்விடுகின்றது. மஜிஸ்டிரேட் ஒருவருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களை அவர்கவனிக்கும்படி சட்டத்தில் கூறப்படவில்லையென்பதையும் அவரது எல்லைக்குட்பட்ட ஜனங்களுக்கு, சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் உண்டுபண்ண நினைத்தே அவர் அவ்வாறு செய்கிறாரென்பதையும் கவர்ன்மென்டாரிடமிருந்து தெரிந்துகொள்ளும் நிலைமையிலிருக்கும் அங்கத்தவரின்கதி நம்மவருக்கு பரிதாபத்தையே உண்டுபண்ணுகின்றது. கோர்ட்டாரின் அதிகாரத்தை அலக்ஷியம்செய்யத்துணிந்த ஓர்வழக்காளிக்கு பதுளை மஜிஸ்டிரேட் வாறண்டு ஒன்றை அனுப்பியதினால் நமது அங்கத்தினருக்கு கோபம் வந்துவிட்டதாக நினைக்க வேண்டியிருக்கிறது. வாறண்டு அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தின் விவரமின்னதென்பதை உணர்ந்து சற்றுநிதானமாக ஆலோசிக்க விருப்பமில்லாத கனம் அங்கத்தினர் 1927-ம் வருஷத்துவக்கத்திலிருந்தே பதுளைப் போலீஸ்கோர்ட்டிற்குகிடைத்துள்ள விண்ணப்பங்களை [illegible]தையும் தேடிப்பிடிக்கும் பயனற்ற வேலையைச்செய்யும்படி அதிகாரிகளை தூண்டிவிட்டனர். சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் பிரதிநிதித்வம் வகிக்கும் ஜனங்களின் குறைபாடுகளைநீக்க முயலுவதை எக்காலத்தும் நாம்சந்தோஷத்துடனே பாராட்டுகிறோம். ஆனால் அவர் அர்த்தமற்றவிதமாக நடந்துகொள்வதையும் அவரது யோசனையற்ற பேச்சினால் கவர்ன்மென்டாரின்நகைப்பிற்கு ஆளாகிக்கொள்வதையும் நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. இவ்விதசெயல்களால் அவர் தமது மதியற்ற மனப்போக்கையே பகிரங்கப்படுத்திவிடுகிறாரென்பதுதான் எமது அபிப்பிராயம்.

## மத்திய மாகாண இந்திய சங்கம்.

### பொதுக்கூட்ட நடபடிக்கைகள்.

சென்றமாதம் 28ம் தேதி ஞாயிற்றுக்கிழமைமாலை9-30 க்குகண்டிநகரசபாமண்டபத்தில்ஸ்ரீமான்சி. எஸ். சிவனடியான் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ்மேற்கண்ட சங்கத்தின் பொதுகூட்டம் ஒன்று கூடப்பட்டது. இம்மாகாணத்தில், பலபகுதிகளிலுமிருந்து பெரும் திரளான அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். அக்கிராசனர் அனைவருக்கும் களிப்புடன் நன்றிகூறி வந்தனமளித்து பின்வருமாறு சிறு சொற்பொழிவு செய்தார். அதாவது சங்கமென்பது பலபேரால் ஒற்றுமையுடன் கூடிய பெரியஜனத்தொகையே. அவ்வாறுள்ள ஒற்றுமைசேர்ந்த பெரும் கூட்டத்தின் பலன்பலவுள. ஒருவரால் செய்யக்கூடாத காரியம் அநேகரால் எளிதில் முடியும். அவ்வண்ணமாகவே நமக்குவேண்டிய சகல காரியங்களும் நமது சங்கத்தின்வாயிலாகச் செய்விக்கலாம். சங்கத்தின் அஸ்திவாரமே ஒற்றுமை. நமக்குள்ளிருக்கும் சகலவித வேறுபாட்டையும் அறவேயொழித்து ஊக்கத்துடனும் ஒற்றுமையுடனும் உழைத்த நம்மிந்தியர்களின் நன்மையையும் முன்னேற்றத்தையும் கருதவேண்டுமென்பதே.

பின் இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்தன்று (30-9-28 ல்) யோசிக்கப்பட்டு தீர்மானித்த பிரேரணைகளும் (17-10-28) இரண்டாம் நிர்வாக சபையின் நடபடிக்கைகளும் வாசிக்கப்பட்டு ஏகமனதாக உறுதிபண்ணப்பட்டது.

இரண்டாவதாக நிர்வாகசபையில் நடந்துள்ள சட்டதிட்டங்களின் ஒவ்வொரு நிபந்தனைகளையும் தனித்தனியே வாசித்து சங்கத்தின் அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தின்பேரில் அமுலுக்கு வந்தது. கனம் ஏ. எஸ். ஜான் அவர்களால் பின்வரும் திருத்த பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதாவது:—

மத்திய மாகாணமல்லாத மற்றபகுதிகளிலுள்ள அனுதாபிகள் வித்தியாசமின்றி ஆண்பெண் இருபாலரும் கூட்டு அங்கத்தினராக (Associate Members) லாமென்றும் சங்கத்தில் சமஉரிமை உண்டென்றும் சபையோரால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

தொழிலாளிகளின் விஷயமாய் ஏதாவது நன்மைசெய்யும்படியுள்ள பிரேரணைகள் உண்டானால் நேயர்கள் அப்பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும்படிக்கு அக்கிராசனர் கேட்டுக்கொண்டதின் பேரில் கனம் கோமஸ் அவர்களின் பிரேரணையை கொண்டுவந்தார்கள். அதாவதுஇச்சங்கம் தொழிலாளிகளுக்கு சாதகமாக நடக்கவேண்டுமானால் ஐரோப்பியா தோட்டக்காரரின் சங்கத்தாரின் அனுதாபமும் உதவியும்வேண்டுமென்பதே. கனம் ஜான் அவர்கள் இதை ஆமோதித்தார். இவர்களிருவரின் ஆங்கில சம்பாஷணையை த்தடுத்து கனம் ஜான் அவர்கள்செந்தமிழில் பேசும்படிகேட்டுக்கொண்டதின் பேரில் தமிழில்மொழிபெயர்த்து சொல்லப்பட்டன. அங்கத்தினரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

இன்னும்தொழிலாளர்களின்பலபகுதிகளில் கொப்பஸ்திரீகளை 9 மாதமுதல்பிரசவித்த ஒருமாதம்வரை அவர்களுக்குவேண்டிய சாப்பாடு முதலிய சகாயங்களும் தோட்டத்து முதலாளிமார்கள் செய்யவேண்டுமென ஒருதீர்மானம் நிறைவேறப்பட்டது. அக்கிராசனர் அவர்களின் வேண்டுகோளாவது:—

சீட்டுக்கடையில் அடவுநகைக்காகக்கொடுக்கப்படும் ரசிதில் மாதம் ஒன்றுக்கு அந்தந்த தொகைகளுக்கு வட்டி இவ்வளவென திட்டமாக கூறப்பட்டிருக்க வேண்டுமென ராஜாங்கத்தாருக்கு அறிவித்து மேற்காட்டியவாறு திருத்தம்செய்ய வேண்டுமென்பதே. கனம் ஏ. எஸ். ஜான் இதை ஆசரித்தார். இத்தீர்மானத்தில் இன்னும்மேற்படி ரசிது கொடுத்து நகையைப் பெறும்போது வட்டியுடன் பெற்றுக்கொண்ட தொகையை திட்டமாக குறிப்பிட்டு ஒருரசீது கொடுக்கவேண்டுமென்று கனம் ராமய்யா ஆசரித்துப் பேசினர். சபையோரால் நிறைவேறப்பட்டது.

அக்கிராசனரால் சட்டசபையின் ஓட்டுரிமையைப்பற்றி டோனுமோர் கமிஷனரால் அளிக்கப்பட்ட சமஉரிமை எல்லாருக்கும் புலனாகும்படிக்கு விரித்துச் சொற்பொழிவு கூறினதோடு, தேர்தல் சமயம் பசுத்தோலைப்போர்த்துவரும் புலிகளைப்பற்றிநாம் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டியது நமதுகடமை. நமக்கென உண்மையாக உழைக்கும் அங்கத்தவர்கள் இந்தியர்களோ இலங்கையர்களோ ஆங்கிலேயர்களோ யாராயிருந்தபோதிலும்உண்மையான அபிமானமுள்ளவரையே நாம் தேர்ந்தெடுக்கவேண்டும். (கரகோஷம்) இக்கிளர்ச்சியாலே தான் இச்சங்கம் ஸ்தாபிக்கும்படிக்கு நேர்ந்துள்ளது.இச்சமயம்நம்உரிமையைத் தவற விட்டுவிடக்கூடாது. நாட்டின் சமயமும் அதிதர்மமாக [illegible] நமதுமுதற்கடமையெனக்கூறினர். இதுபற்றிவிதவியாக ஆசரித்து கனம் ஏ. எஸ் ஜான் அவர்கள் விரிவாக அரிய விஷயங்களை எடுத்துக்காட்டி, தற்போதுள்ள வேடம்பூண்ட பட்டதாரிகளின் நோக்கத்தையும் தெளிவாகக்கூறி நாம் இனிவரும் நாட்டின் விஷயத்தில் ஏமாந்து போகாதிருக்கும் படிக்கும்வற்புறுத்திக்கூறியுள்ளார். (கரகோஷம்) உபஅக்கிராசனரான ஆகஸ்தியானவர்கள் கொண்டுவந்துள்ள பிரேரணையாவது:—

இந்தியர் தொழிலாளர்களுக்கு சமவாக்குரிமை யளிக்கவேண்டுமென செய்தசிபார்சுக்கு எதிராக சிலராஜீய சங்கங்களும் வாதிகளும் செய்யும் கிளர்ச்சியை இச்சங்கம் பலமாய் கண்டிக்கிறதுடன், தற்சமயம் கொழும்பு சட்டசபையில் வாதிக்கப்பட்டுவரும் இந்தவிஷயத்தில், இந்தியர்களுக்கு அனுகூலமாக ஜனப்பிரதிநிதிகள் தாங்கள் வாக்குகளை கொடுப்பார்களென்று இச்சங்கம் எதிர்பார்க்கிறது. இந்தபிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. (கரகோஷம்) கனம் ஆவிட்டப்பெருமானவர்கள் முன் கூடியகூட்டத்தில் கொண்டுவந்த கட்டடபிரேரணையைப்பற்றி நம் நண்பரான இந்திய சகோதரருக்குவிளக்கிச் சொல்ல வேண்டுமென்று அக்கிராசனரைக் கேட்டுக் கொண்டதின் பேரில் கட்டடம் அவசியமாக இலங்கையின் முக்கிய இடங்களில் இந்தியருக்குச் சொந்தமாகஒவ்வொருகட்டடம்வேண்டுமென்று சொன்னார். "இலங்கை இந்தியன்" பத்திரிகாசிரியரும் (Advocate)நியாயவாதியுமான கனம் சத்தியவாகீசுவரய்யரவர்களை உபன்யாசிக்கக்கேட்டுக் கொண்டதின்பேரில் பின்வருமாறு பேச ஆரம்பித்தார்கள்.

இச்சங்கத்திற் கூடியுள்ள நம்இந்திய நண்பரனைவருக்கும் என் அன்பார்ந்த வந்தனமளிக்கிறேன். என்னைப்பற்றி கனம் அக்கிராசனர் அவர்கள் பட்டப்பெயர் இரண்டுகொடுத்து அழைத்து உங்களுக்குவெளியிட்டதால் அப்பெயர்களின் விஷயமாய்க் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது:—

பத்திரிகாசிரியரென்றும், நியாயவாதி என்றும் கூறினர்.

நியாயவாதியாக முதன்முதல் உழைக்க ஆரம்பித்தபோது ரத்தினபுரியை அடுத்துள்ள தோட்ட தொழிலாளிகளின் வகுப்பிற்சேர்ந்துள்ள "முத்தண்ணன் கொலைகேஸ்"விஷயமாய் பேசவேண்டி வந்ததில் தொழிலாளருக்கு உதவிசெய்யும் பாக்கியம் பெற்றேன். நான் எப்போதும் தொழிலாளர் விஷயமான கேஸ்களுக்கு யாதொரு பிரதியுபகாரமும் நாடி செய்வதில்லை. (கரகோஷம்) நிற்க, நான் தனவந்தனாயிருந்து சம்பாதிக்கும் பணத்தைக்கொண்டு "இலங்கை இந்தியன்" என்ற பத்திரிகை நடத்திவருகிறேன். இதின் நோக்கம் பொதுஜன ஊழியஞ் செய்யும் பொருட்டேயாம். இது என்னால் நடைபெற வேண்டுமென்றும், நானே நடத்துவதாகவும் கருதவேயில்லை. இனிமேலும் கருதப் போவதில்லை என்றும் சட்டசபையில் மோலமொறேஅவர்களின் விவாதமாவது தொழிலாளருக்கு வாக்குரிமை கொடுக்கப்படாது. ஏனென்றால் தொழிலாளர் மாடுகள், மிருகங்கள் இவைபோன்றவர்கள், அடிமைகள் இக்காரணங்கள்பற்றி இவர்களுக்கு வாக்குரிமைஸ்தானங்களிருக்கப்படாது என்பது; நான் கேட்கும் கேள்வியாவது. இவர்களை அடிமையாக்கினது யார்? இவர்களுக்கு வாக்குரிமை பாத்தியதை கொடுத்தால் உடனே அடிமையின்சுபாவக்குணங்களெல்லாம் நீங்கிவிடுமென்பது. ஆகையால் நீங்களெல்லோரும் ஊக்கமாக உழைத்து எட்டுலக்ஷம் பெயரான உங்களுக்கு உரிமையைக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திப் பெறவேண்டியது. உங்களுக்கு தகுந்த சங்கமொன்றிருக்க வேண்டும். 8000 ஐரோப்பியர்களுக்கு எத்தனை சங்கங்களிருக்கிறது பாருங்கள். தோட்டக்காரர்களின் சங்கம் ((Planters Association) வியாபார சங்கம், ஐரோப்பியசங்கமென பல சங்கங்களிருப்பதாக உங்களெல்லோருக்கும் தெரியும். நான்உங்களை தயவாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் உங்களின் சங்கங்களெல்லாம் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.

இந்தியர்களும் மனுஷர்கள்தான் என்று காண்பிக்கும்பொருட்டு தமிழ், இங்கிலிஷிலும் பத்திரிகைகள் இரண்டுவேண்டும்.

கனம் ஆவிட்டப் பெருமான் அவர்களின் நோக்கம்போல் கட்டடம்ஒன்று வேண்டும். எனது எண்ணம்போல் நீங்களும்முயற்சியோடு உழைப்பீர்களென்று நம்புகிறேன். இவ்வளவு தூரம் எனக்கு பேசும்படிக்கு சமயம்கொடுத்த கனம் அக்கிராசனருக்கு எனதுநன்றி கூறுகிறேன் என்று முடித்தார்.

கடைசியாக அக்கிராசனர் அடுத்தகூட்டம 4-11-28ல் நாவலப்பட்டியில் கூடுவதற்கு சகலரும் விஜயஞ்செய்து ஊக்கமாயுழைக்கும்படிக்கு கேட்டுச் சகலருக்கும் வந்தனமளித்தார். இத்துடன் அக்கிராசனருக்கு வந்தனத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது.

# மகாத்மாவும் அஹிம்ஸையும்.

—0—

## கன்றைக் கொன்றது ஹிம்ஸையா?

(எஸ். வி. ராஜன் எழுதியது)

மகாத்மா காந்திஜியவர்களின் சபர்மதி ஆசிரமத்தில், மாட்டுப் பண்ணையொன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அங்கு ஈனமான ஓர் கன்று, பிராணஹிம்சை படும்நிலைமையில் நோயுற்றிருந்தது அதுபடும் வேதனை ஆசிரமவாசிகளால் சகிக்க முடியாததாயிருந்தது. ஒருசர்ஜனை அழைத்துக்காட்டியதில்இனிமேல் அக்கன்று பிழைக்காதுஎன்று நிச்சயமாகக் கூறிவிட்டார். தன்னைப்போல் பிறரையும் நேசிக்கும் மஹாத்மா, ஓர் ஏழை பசுவின்கன்று படுந்துயரைக்கண்டு சகிப்பாரோ! அக்கன்றின் வேதனையைத் தீர்க்கத்தன் உயிர் அவசியமென்று தெரிந்தால், அதைக் கொடுக்க அவர் தயங்குவாரென்று நினைக்கிறீர்களா? கொடுத்து விடுவாரென்பதே எனது துணிபு.

கன்றின் துயரை எம்முறையில் நீக்கலாம்என்பதே நினைவாக யோசித்தார். ஒரே ஒருவழியின் மூலந்தான் அதன்வேதனையை நீக்கக்கூடும், அதுவேதனைப்படும் உடலைவிட்டு உயிரை நீக்கிவிடுதலேயாகும். ஆசிரம அங்கத்தினர்களுடன கலந்துவிவாதித்து, ஓர் முடிவுக்குவந்தார். ஊசியால் இன்ஜெக்ஷன் செய்தவன்மூலம் அக்கன்றின் உடலில் விஷத்தைச் செலுத்தினார்கள். அக்கன்று இறந்துவிட்டது.

இது ஹிம்ஸையா? அஹிம்ஸையா? கருணையுடைய எந்தமனிதனும் பிறர் துயரடைவதைக்கண்டு சகிக்க முடியாது. கொடியக் குற்றம்செய்து, தூக்குத்தண்டனையடைந்த குற்றவாளியைக்கண்டும் இரங்காதார் யாரோ! கொலை பாதகனைத் தூக்கும்பொழுதும் கண்ணீர் உதிர்க்காதார் யாரோ! மனித சுபாவம் இதுவே. உயிரும் பிரியாமல், சுகமும் அடையாமல், வேதனைப்பட்டுக் கொண்டிருந்த சில நோயாளிகளைப்பார்த்து விட்டுச்சென்ற ஜனங்கள், இவ்வளவு நாளாக சுகமடையவில்லையே! இந்தக் கண்ராவியைப் பார்க்கமுடியுமா? இதைவிட ஒரே வழியாக இறந்துபோனால் உத்தமமாக இருக்குமே, என்றுசொல்லிப் பரிதபித்ததை நான் எத்தனையோ முறை கண்டிருக்கிறேன். நோய் வயப்பட்டு, சுகமடைய முடியாத நிலையில் அவஸ்தையுற்ற எத்தனையோ ஜனங்கள, தற்கொலை செய்துகொண்டது கண்கூடு. உயிர் யாருக்குமே கருப்பஞ்சாறன்றோ! மானமழிந்தவனுக்கும், மறுதேசம் போகவசதி இருந்தால் உயிர்விடத்துணியான். இவ்வித உயிர்ப்பற்று நோயாளிகளுக்கில்லை. சதாவாட்டிக் கொண்டிருக்கும் நோயின் துன்பம், உயிர் விடுதலை லட்சியம் செய்வதில்லை. உலகத்தில் நரகவேதனையென்ப தொன்றுஇருந்தால், அது தீராத நோயேயாகும். இவ்விடத்தில் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய 'கொடிது கொடிது வறுமைகொடிது—அதனினுங்கொடிது ஆற்றொணுக் கொடுநோய்' என்னும்பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. இவ்விதம் ஹிம்ஸைப்படும் ஓர் ஜீவப்பிராணிக்கு, தன்னாலோ, பிறராலோ, வேறெவ்வித உதவியும் செய்யமுடியாதென்றுக் கண்டால் ஓர் அஹிம்ஸைவிரதம் செய்யவேண்டுவதென்ன? அதன் உயிரைப் பிரித்து, ஹிம்ஸையை விலக்குதல் அஹிம்ஸையாகாதா? கலங்கமற்ற அஹிம்ஸையேயாகும். இதைத்தான் மகாத்மா செய்தார். அதுவும் இலகுவான முறையில் செய்திருக்கிறார்.

பம்பாயில் சில ஜைனர்களும், வைதிகர்களும் கூடிக்கொண்டு, இதைக்கண்டு இதைக்குறித்து ஓர்கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினார்களாம்! அத்தீர்மானத்தில் 'காந்தி' என்னும்பெயருக்கு முன்பு, 'மகாத்மா' என்னும்பதத்தை வைக்காமல் பிடுங்கிக் கொண்டார்களாம். சர்க்கார் பாட்டுக்குத்தக்கதாக தாளம் போட்டபோது கொடுக்கப்பட்ட 'ராவ் பகதூர்' 'கான்பகதூர்' 'திவான் பகதூர்' அல்லது 'ராவ் சாகிப்' முதலிய மூக்குகளை, கொஞ்சம் சுயமரியாதை உணர்ச்சி உண்டானஉடனேயே ரத்துசெய்து விடுகிறார்களல்லவா? அம்முறை நமது வைதீகக் கூட்டத்தாரிடத்திலும் புகுந்துவிட்டாற் போலிருக்கிறது! இவ்வைதிகப்பித்தர்களுக்காய் நாம் இரங்குவதா? அன்றி நகைப்பதா? எது உசிதம்? இக்கனவான்களின் பொருளற்ற வைதீகங்களும், அவர்கள் பற்றுகோலாகிய ஐதீகமும் என்று நசியுமோ, அன்றுதான் நம்மிந்தியா வாலிப இந்தியாவாகும். மிஸ்காதரின் மேயோவைப்போன்ற நாடோடிப் பெண்மக்களின் விஷப்பார்வைக்கும் இலக்காகாதிருக்கலாம்.

மிகப்பசியால வருந்திய பாம்பொன்று ஒருதவளையைப் பிடிக்கத் தூரத்திற்று. தவளைக்கோ தப்ப வழியில்லை. இனிஎப்படியும் பிடிபடுமென்பது நிச்சயம். அப்பொழுது தான்கண்டேன் நான், சில கல்லுகளின் மூலம் பாம்பைப் பயப்படச்செய்து தூரத்திவிட்டேன். என்னுடைய இச்செய்கை பாவமா? புண்ணியமா? பாம்புக்கு இரைகிடைக்காமல் செய்யவேண்டுமென்பது என் கருத்தல்லா. தேரையைக் காப்பாற்றவேண்டுமென்பதே என் மனத்தூண்டல். இதை நான் பாவமென்று கருதவில்லை!

காவிரி நதியில் சிலபடகு (பரசல்)துறைகள் அரை, முக்கால், ஒருமயில்வீதம் விஸ்தீரணமுள்ளது என்பது உங்கட்குத் தெரியும். ஆடிமாதம் வெள்ளப்பெருக்குக் காலத்தில், இத்துறைகள் ஒன்றிலிருந்து, ஒருபடகு (பரசல்) புறப்பட்டது. அதில்இருபது ஆட்களும், 10–12 ஆடுகளும் ஏற்றப்பட்டிருந்தது. பாரம் அதிகம். வெள்ளப்பெருக்குக் காலமானதால், க்ஷேமமாக அக்கரை சேர்வது கஷ்டமென்று, படகோட்டி (பரசல்காரர்)கள் கருதினார்கள். ஏறிஇருந்த எல்லோருக்குமே அவசரம். ஒருவராவது இறங்கசம்மதிக்கவில்லை, மேல்வெள்ளம் (அதாவது திடீரென அதிகத்தண்ணீர்) வராதிருந்தால், படகை க்ஷேமமாகக் கொண்டு சேர்க்கலாம். இல்லாவிடில் கவிழ்ந்துபோகுமென்பது நிச்சயம். அரைதைரியத்துடன் படகு புறப்பட்டது. கொஞ்சதூரம் வந்தபிறகு வெள்ளம் ஏறிவருவது தெரிந்தது. படகு மறுகரை சேருவது துர்லபம் என்பதை அறிந்தவுடன், எல்லோருக்கும் பிராணபயம் உண்டாயிற்று. மேலே உண்டான இரைச்சலால், இன்னும் பெரிய வெள்ளம் வருகிறதென்பது படகோட்டிகளுக்குத் தெரிந்தது. அந்த வெள்ளத்தில், படகு தப்புமென்று நினைக்க கடுகளவு நம்பிக்கையும் கிடையாது. படகின் பாரத்தைக் குறித்து, கொஞ்சம் உயர்த்திக் கொண்டால் மட்டுமே ஒருவாறு சமாளிக்கலாம். ஆடுகள் பன்னிரண்டையும் தூக்கி ஆற்றிலெறிந்துவிட்டு படகில் தாங்கும் தண்ணீரின் வேகம் படகை கவிழ்த்து விடாதபடி, எச்சரிக்கையுடன் நின்றனர். அப்படியிருந்தும், வெள்ளம் வந்த வேகத்தில் படகில் தண்ணீர் ஏறிவிட்டது. தெய்வச் செயலாக மறுவெள்ளம் வருமுன் கரைசேர்ந்தனர். ஆடுகளை எறிந்து பாரத்தை குறைத்திராவிட்டால், முதல்வெள்ளத்திலேயே படகு அமிழ்ந்திருக்குமென்பது நிச்சயந்தான். இந்நிலைமையில், ஆடுகளைத் தண்ணீரிலெறிந்தது ஹிம்ஸை அல்லது பாவமென்று நீங்கள் கருதுகிறீர்களா? நன்றாய் சீர் தூக்கிப் பாருங்கள். 'மகாத்மா' பதத்தை எடுத்துவிட்ட வைதீகர்களை வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். அது அஹிம்ஸை என்பதுதான் என்கருத்து. எல்லோருமே வெள்ளத்திலமிழ்ந்து இறந்துபோவதைக் காட்டிலும், ஓரறிவு குறைவாகக்கருதப்படும் ஆடுகளை ஆற்றிலெறிந்து, மற்ற மனிதர்களைக்காப்பாற்றியது காருண்யமல்லவா? இதையும் பாவமென்றும், கொடுமை என்றும் கூறிவிடுவார்களோ வென்றுபயப்படுகிறேன்!

'மகாத்மா' என் பதம் அவருக்கு வழங்கப்பட்டாலும் ஒன்றுதான்; வெறுங்காந்தியாயிருந்தாலும் ஒன்றுதான். எப்படியானாலும் காந்தி காந்தியே. நமது பழங்கதைகளில் 'கோடி சூரியப்பிரகாசம்' என்னும்பதம் அடிக்கடி வழங்கப் பெற்றிருக்கும். அதே காந்தி (பிரகாசம்) தான் கலியுகத்தில் தோன்றிய இக்காந்தி. அவரும் வைதீகர்தான். வைதீகர்களை மதிப்பவர்கள் தான். ஆனல், சிறந்த அஹிம்ஸை விரதராகவிருந்து வாதிடுகிறார். அவரை பூஜ்ய மகாத்மாவென்றும், அறுபது வயதுசென்றதினால் புத்திமயங்கி விட்டதோவென்றும் எழுதிய பத்திரிகைகளும், நமது வைதீகக் கூட்டத்தாரும் காரியத்தின் காரணத்தை சீர் தூக்கிப் பார்த்தார்களில்லை. அதற்காக அவர்களை நான் குறைகூறப் போவதுமில்லை. ஆனல், "சேவித்தும், சென்றிரந்தும், பாவித்துத்து
தெண்ணீர் கடல்கடந்தும் பாட்டிசைத்தும்—
ம், பாராண்டும் போவிப்பம், பாழின்உடலை வயிற்றின்
கொடுமையால் நாழிஅரிசிக்கே நாம்."
என்ற கொள்கையா? அல்லது உண்மை அபிமானமிருந்தும் ஆராய நேரமில்லாக் கஷ்டமா? என்றுமட்டுமே கேட்கிறேன்.

# இந்தியர்களின் வாக்குரிமை.

## கௌரவ ஜெயா அவர்களின் பிரசங்கம்.

சென்ற வெள்ளியன்று கூடிய இலங்கை சட்டசபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் டீ. பீ. ஜெயா அவர்கள் கீழ்க்கண்ட பிரேரணையொன்றை கொண்டுவந்தார்:—

"இலங்கையரல்லாத பிரிட்டிஷ் பிரஜைகள் எல்லோருக்கும் இலங்கையரைப் போலவே சம அந்தஸ்தும் பிரஜைகளுக்குரிய மற்ற உரிமைகளும் அளிக்கப்பட வேண்டுமென்று இச்சட்டசபை கருதுகின்றது."

இப்பிரேரணையை ஆஜராக்கிய பின்னர் வாக்குரிமையைப்பற்றி அவர் நீண்டதோர் பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

டொனமூர் யாதாஸ்தென்னும் இருண்ட சித்திரத்தில் சற்று பிரகாசமான ஸ்தானம் ஒன்றுள்ளது. அது ஓர் குறித்த வயதினராகிய ஒவ்வொரு ஆண் பெண் மக்களுக்கும் சில ராஜீய உரிமைகளை அளித்திருப்பதேயாகும். கமிஷனர்களைப்பற்றியும்அவர்கள் செய்துள்ள தீர்மானங்களைப்பற்றியும் எவ்விதமாக நினைத்தபோதிலும் இந்நாட்டிலுள்ள புருஷர்களனைவருக்கும் வாக்குரிமை அளித்ததற்காக இந்நாடு அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றது. வரும் காலத்தில் ராஜீய யந்திரம் சரிவர வேலை செய்யவேண்டுமானல் அவ்வுரிமைகளை பல வித நிபந்தனைகளைக்கொண்டு நன்றாகப் பந்திக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். இது ஓர் கெட்ட எண்ணமேயாகும். இதுபோலவே 1832–ல் இங்கிலாந்தில் சிலர் தப்பெண்ணங்களை ஆதரித்து வந்தனர்; ஆனல் அன்னவரின் அதிர்ஷ்டவசமாக அவர் எதிர்பார்த்தபடி சச்சரவுகள் ஒன்றும் நிகழவில்லை. ஜனசமூகத்தில் கல்வியற்ற பொது மக்களிடம் நம்பிக்கை வைப்பதினல் இந்நாட்டார் பயப்படவேண்டியதொன்றுமில்லை. அவர்களில் தாழ்ந்த கூலிவேலை செய்பவர்களையும் மிகக் கேவலமாகக் கருதுவோரையும் தங்களுக்கு வாக்குரிமை பெற யோக்கியதையில்லையென்று நினைத்துக்கொண்டிருப்போரையும் தனியாக விட்டுவிடவேண்டும். இத்தீவிலுள்ள எந்த எளியவனுக்கும் வாக்குரிமை பெற பாத்திய முண்டென்னும் கொள்கையை மனதில் திட்டப்படுத்திக்கொண்டு சட்டசபை அங்கத்தினர்கள் வாக்குரிமை சுதந்திரத்திற்காக வாக்களிக்க முன் வரவேண்டும். கல்வியென்னும் பிரச்னையைப்பற்றி கமிஷனர்கள் தெளிவாக விவாதித்துள்ளார்கள். கல்வியில்லாதவர்களுக்கு சாதாரண புத்தி சாதுர்யமும் பகுத்தறியும் தன்மையும் இல்லாமல் போய்விடுமென்று நான் நம்பவில்லை. ஆதலால் அவர்களுக்கு தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் வேண்டியளவு திறமையுண்டென்று கூறுவது தவறாகாது. இவ்வுண்மையை உணராதது பற்றியே மக்களின் வாக்குரிமை சுதந்திரத்திற்காக பாடுபடும் ஜனத் தலைவர்களில் சிலரும் கூட இந்நாட்டிலுள்ள இலங்கையரல்லாத பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு வாக்குரிமையளிக்க மறுக்கின்றனர். சற்றேனும் கல்வியறிவற்ற இலங்கையன் ஒருவனுக்கு வாக்குரிமை விஷயத்தில்அவசியமானபுத்தியும் திறமையும இருப்பதாக கருதிய ஸ்ரீமான் மொல்லாமூரே அவர்களுக்கு அவ்விஷயத்தில் இந்தியனொருவனுக்கு போதியளவு பொறுப்பில்லையென்று துணிந்து கூறிவிட்டார். எளியவனான இலங்கையனொருவனுக்கு வாக்குரிமை பெற அருகதை யுண்டென்றால் அவனைப் போல் எளிய நிலைமையிலிருக்கும் ஓர் இந்தியத் தோட்டத் தொழிலாளிக்கும் அவ்வுரிமையை ஏன் அளிக்கக் கூடாது? தற்கால பார்வைக்கு இந்தியத் தொழிலாளி எளியவனைத் தோன்றியபோதிலும் கல்விசிறப்பும் நாகரீகமும் முதிர்ந்த பண்டைக்கால இந்தியரின் பெருமையில் ஓர் அணுவேனும் அவனியல்பில் குடிகொள்ளுமன்றோ! இந்நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் முக்கிய காரணமாகவுள்ள இந்தியத்தொழிலாளிக்கு இந்நாட்டின்கண் ஸ்திரமான அபிமானமில்லையென்று கூறுவது நீதியாகுமா என்று கேட்கிறேன். நகர வாசியாயினும் சரி தோட்டக்காட்டிலிருப்பவனாயினும் சரி, இந்தியத் தொழிலாளிக்கு புத்தியிற் சிறந்த ஒரு சிங்கள விவஸாயிக்கிருப்பது போல்புத்தியும்திறனுமுண்டென்று திண்ணமாகக் கூறுவேன். ராஜீயம், பொருளாதாரம், சமுதாயம் சரித்திரம் முதலிய எல்லா முக்கிய விஷயங்களிலும் இந்நாடு இந்தியாவையே ஒத்திருக்கிறது; இந்தியாவுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. வேண்டுமானல் இந்தியா நினைத்து 24 மணி நேரத்தில் இலங்கையைப் பட்டினிபோட்டு விடலாம். இது காறும் இலங்கையர்கள் இந்தியாவையே நம்பியிருக்கிறார்கள். இனிமேலும் அவ்வாறு இருந்தே தீரும். வாக்குரிமை இந்தியர்களால் சென்ற தேர்தல்களில் அனுபவிக்கப்பட்டுவரும் ஓர் சுதந்திரமேயாகும். அதற்கு இப்பொழுது ஏன் தடைசெய்ய வேண்டும்? சில பகுதிகளில் இந்தியர்கள் மெஜாரிட்டியாக விருப்பதால் கெடுதல் என்ன? தேசமிருந்துவரும் தற்கால ராஜீய நிலைமையில் வேற்றுமை பாராட்டி சச்சரவுகளையுண்டு பண்ணுவது சரியான தல்ல என்று பேசி முடித்தார்.

பிரேரணையை ஸ்ரீமான் கௌரவ. எக்ஸ் பெரைரா அவர்கள் ஆமோதித்தனர்.

# இலங்கை தமிழர் பௌத்த சங்கம்.

—(0)—

[illegible] 1928ம் வருஷம் அக்டோபர் மாதம் மேற்படி சங்கத்தின் சார்பில் கடந்த 14ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு வாழைத் தோட்டம் மைதானத்தில் புத்ததர்ம விஷயமாகத் தமிழ் சிங்களமென்னும் இருபாஷைகளில் பிரசங்கங்கள் நடைபெற்றன. அன்று (முதலாவது) பொரளை திலகரத்தன ராமவாசிபஞ்ஞா ஜோதி அவர்களால் பஞ்சசீலம் பெற்றன. திருவாளர்கள் ஸ்ரீ கே. கோவிந்தபிள்ளை, எம். நல்லையா, எஸ். சுப்பையாபிள்ளை, எம். கனகரத்தினம் என்பர்களால் சிற்சில சொற்பொழிவுகள் நிகழ்த்தினபின் அக்கிராசனதிபர் திருவானர் எஸ். எம். நாயகம் அவர்கள் புத்தசமயம் இந்தியர்களுடையது. அதில் மேன்மை தங்கிய காருண்ய கருணையே பொதிந்து இடக்கின்றன. இதை நாம் இந்திய சகோதரர் பெரும்பாலும், புறக்கணித்தே ஜென்மம் பிறக்கிறதாயிருக்கிறது. அதுபெரிய அறியாமையின் அசைட்டையே யல்லாது வேறில்லை. ஆதலால் இதன்பின்னும் அப்படிச் செய்யாது சுத்தநிர்மல நிர்த்தாமயமாகிய பௌத்தசமயத்தை அனுஷ்டிப்பதே முறை. ஆகையால் தமிழ்மக்கள்யாபேரும் உண்மையைஉணர்ந்து பௌத்தசமயம்இன்னதென அறிந்து கைப்பற்றும்படியாக பன்முறையும் பிரார்த்திக்கிறேனென்று முடித்தனர்.

பின் சிங்கள சகோதரர்களை, இப் பொன்னிலங்கையில் நாம் கையாண்டுவரும் நமது பௌத்தசமயத்தை அன்போடு இந்திய சகோதரர்களுக்கு புலப்படுத்துவது நமதுபிரதான கடமையாகும். ஆதலால் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து அவர்கள் பேரில் கருணைசெய்து ஸ்ரீ மத் புத்தபகவானின் சுத்தசற்கருணையை சுத்தகையினும் எடுத்துபுகழ்வது உத்தமத்திலும் உத்தமம். ஆகையால் தமிழர் பௌத்தசமயத்திற்கு நம் சிங்கள சகோதரர்கள் யாவரும் இயன்ற உதவிசெய்ய வேண்டுகின்றேன் என்றனர். பின்பு கூட்டம் இனிது கலைந்தன.

### இந்தியத் தொழிலாளரின் நிலைமை.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவனை நாட்டிற்கு அனுப்பிவைக்கவேண்டி யதவசியமென தொழிலாளர் விஷயங்களி லீடுபடும் இலங்கை அதிகார வர்க்கத்தினரும் உணர்ந்து வருகின்றனர்.

இந்தியத் தொழிலாளி இலங்கையில் சுதந்தரத் தேடிவருகிறனு அல்லது அவன் விரும்பிவரும் சுகவாழ்க்கை அவனுக்கு இங்குகிடைத்து வருகிறதா என்பவைகளைப்பற்றி ஆராயும் விஷயத்தில் கனம் ஹைநரி அவர்களின் யாதாஸ்து பெரும் உதவியாகவிருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

### இந்துசமய சரித்திரம்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சமயம் வலிவிழந்து மங்கவும் பெற்றன. இலங்கையிலே தேவார திருவாசகங்கள் அறிந்தோர் பலராயினும் வைஷ்ணவ கிரந்தங்களாகிய நாலாயிரப் பிரபந்தம் அறிந்தோர் மிகச்சிலரே. ஆழ்வார்களும் சமயகுரவரும் இருந்தகாலம் கி. பி. 600—1000 வரை என்னலாம்.

ஆழ்வார்களுக்குள், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்என்னும் முதல் மூவர், குலசேகரப்பெருமான், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய இவர்களது பிரபந்தங்கள் பக்திரசம் நிறைந்தவை. பெரியாழ்வார் பிரபந்தங்கள் பெரும்பாலும் பிள்ளைத்தமிழ் நூல்கள். (இங்கே 'பிள்ளைத்தமிழ்' என்றது பிற்காலத்துப் பிள்ளைத்தமிழ்நூல்கள்போலபலவிதிக்குள் அமைந்ததன்று.) ஆழ்வார்பன்னிருவரில்ஒருவர் ஆண்டாள் அல்லது சூடிக்கொடுத்த நாய்ச்சியார் என்னும் பெருன்ன ஒருஸ்திரீ ரத்தினம்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

### எவ்வாறு நம்புவது?

"ராஜப்பிரதிநிதி முதல் கவர்னர் உட்படப்பலரும் சுயராஜ்யகக்ஷியை சேர்ந்தவர்

### கடிதங்கள்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

### தேன்பாணிபோன்ற ஹக்கோமால்ட் தித்திக்கும் சிறந்த சஞ்சீவி.

இலங்கை இந்தியன் பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

எனக்குஇப்போது வயது இருபதாகனே. இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்கக்கூடாதென்று ஒருவரும் சொல்லவில்லை' இந்தியாவை ஒருநாள் இந்தியர்களே ஆளவேண்டுமென்று உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஒரே மனதுடன் கூறியிக்கிறார்கள்." என்று திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் காலெட்டி என்பவர் சென்றவாரத்தில் பட்ட அளிப்புவிழா நடத்திய பொழுது கூறினர். இந்தியர்கள மீது பெரும் வ்ருணையுள்ள இவ்வெள்ளையரின் கூற்றை எவ்வாறு நம்புவது?

ன் குழந்தைபருவம் தொடங்கி இவ்வயதுவரை சோகைக்குணம் என்னும்வியாதியால் பீடிக்கப்பட்டு பசியில்லாமிகவும் மெலிவுற்றிருந்தேன். அவ்வியாதியை தொலைப்பதற்கு அநேகமருந்துகளும், ஆகாரங்களும் நான் சாப்பிட்டும் பயன்படவில்லை. ஆனல் தங்கள் பத்திரிகையில் இந்த ஹக்கோமால்டின் குணங்களைப்பற்றி பாராட்டிபேசியிருப்பதை என்மாமனர் அவர்கள் வாசித்துக்காட்டி எனக்குஒரு டின் ஹக்கோமால்ட் வருத்தி தந்தார்கள். நான் அதை சாப்பிட்டதில் இருந்து அதிகபசி உண்டாகிறது. என் திரேகவும் புஷ்டியடைந்து வருகிறது. அதனால் எனக்கு பூரணசுகம் தெரிகிறது. என்போன்ற நோயாளிகள் சுகமடைய இது ஓர் சிறந்தசஞ்சீவியாய் இருப்பதோடு விருப்பமுடன் சாப்பிடுவதற்கும் தித்திப்பாகவும், தேன்பாணியை போலுமிருக்கிறது.


இங்ஙனம் தங்கள் உண்மையான


கிளாக்குளம் | T G. சங்கரக்குமாருபிள்ளை
14-10-28 |

AMERICAN

# EVEREADY

## FLASHLICHTS &BATTERIES.





அமெரிக்கன்

எவர்ரெடி


தூரதிருஷ்டி காந்ததீபங்களும்

பாட்ரிகளும்

இந்த காந்தவிளககுகள் எல்லாவிடங்களிலும் விற்கப்படுகின்றன.

எல்லா தினுசுகளிலும் அளவுகளிலும் கிடைக்கும்.

இரவுகாலங்களில் நீங்கள் எங்கே போக நேர்ந்தாலும் ஒரு அமெரிக்கன் எவர் ரெடி காந்தவிளக்கை எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் சௌகரியத்தை தரக்கூடியது. நம்பிக்கையானதும் எவ்வித ஆபத்தும் வராதபடி பாதுகாக்கக் கூடியதுமான காந்த விளக்கு இதுவே.



எப்பொழுதும் உங்கள் காந்தவிளக்களுக்கு அமெரிக்காவில் தயார்செய்யப்பட்ட

'யூனிட்செல்'லுகளையே

உபயோகியுங்கள். அவைகள்தான் நீண்டகாலம் உழைக்கக்கூடியவை.

டாஜ் அண்ட் ஸெய்மூர் லிமிட்டெட்,


28, சத்தாம் வீதி, கோட்டை, கொழும்பு



DODGE & SEYMOUR Ltd,

28, CHATHAM STREET, FORT

COLOMBO.



## லயன் பவுடர்

எப்போதும் டாகட்டர் ட்ராலியின் சிங்க மார்க் டாயலட் பவுடரையே உபயோகிப்பதினுல் தேமல்கள, புண்கள் முகப்பருவுகள் முதலியன நீங்குகிறதுமல்லாமல்தோல் சம்பந்தமான எவ்வித வியாதிகளும் அணுகாமல் பாதுகாக்கப்படுகிறது. அது முகத்தின் வசீகரத்தையும் அழகையும் அதிகரிக்கச் செய்கின்றது.




அது தோலுக்குக் கெடுதி யொன்றும் செய்யாது. குழந்தைகளுக்கு மிகவும் நல்லதென அங்கிகாரம் பெற்றது.


எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. Adycappa Chetty
COLOMBO.

(C.I. 2.)

## "ஆர்கையில்"

துவிசக்கிர (சைக்கிள்) வண்டிகள்



இலங்கையில் மிக குறைந்த விலைரூபாய் 85-00

சிறுதொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறேம்.

HOARE
& CO (ENGINEERS) LTD

தபால் பெட்டி நெ. 22


கொழும்பு.

ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.

# கோல்கேட் ஆக்ட்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.

## உலகப் பிரசித்திபெற்ற ஆக்ட்டகன் சோப்




வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

**ஆக்ட்டகன் சோப்**

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாது எந்த அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

**மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்ட்டகன்சோப்பைக்கவனித்துவாங்குங்கள்.**

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

**ஆக்ட்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்**

விலையுயர்ந்த பரிசுவிபரங்கள் அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்.


சோல் ஏஜண்டுகள் :

**A. V. R. A. Adycappa Chetty,**
15, Sea Street, COLOMBO.

**A. M. Othuman Pillai,**
24, Keyser Street, COLOMBO



## இது ஓர் புதிய மாதிரி Ford "போர்ட்" கார்



Fordor Sedan

**காற்று காலங்களில் பிரயாணம் செய்ய மிகவும் ரக்ஷையாயுள்ளது. காரின் ஹுட்டை திறந்து வைத்திருதால் மிகவும் குளிர்ச்சியை கொடுக்கும்.**

**ஒவ்வொரு காருடனும் ஸ்திரமாகவிருக்கும் சாமான்களாவன:—**

5" டயர், ட்யூப், நாலுரோதைகளுக்குமுள்ள ப்ரேக்குகள், ஹைட்ராலிக் ஷொக் அப்ஸார்ப்ர், முன் பின்னுள்ள பம்பர்கள், ஸ்பீடாமீற்றர், றூல்லைட்டுகள், ஸ்டாக்லைட்டுகள், பெட்ரோல் கேஜ், அட்டோமாட்டிக் வின்ற்ஷீல்டு, வைப்பர் முதலியவைகளும் கொடுக்கப்படும்.

முழுவிவரங்களைப்பற்றியும், மாதாந்தம் சிறுத்தொகைப்பணம் கட்டி கார் வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைப் பற்றியும் எழுதி விசாரித்துக்கொள்ளலாம்.

**பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,**
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
**கொழும்பு.**

எல்லா தாய்மார்களுக்கும் சிறந்த புத்திமதி இதுவே

நீங்கள் பிரசவித்த பின் பலமற்றவர்களாகவும், பலத்தை இழந்தவர்களாகவும் தோன்றினல் ஏமாந்தவரைப் போல இராதீர்கள். நீஙகள் இழந்த பலத்தையும், தேக வல்மையையும் மறு முறையும் நீங்கள் நிச்சயமாய் அடையலாம் இதற்குக் கைகண்டது "ஹக்கோஸன்" ஒன்றே மற்றவைகளினல் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது.

தேகத்திற்கு உற்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கொடுக்கக் கூடியது இந்த டானிக் ஒன்றே. இச்சிறந்த டானிக் ஜீரணசக்தியை அதிகப்படுத்தி ரத்தத்தைச் சுத்திசெய்கிறது.




பல பிரமிக வைத்தியர்களால் இது மிகவும் மேலானதெனச் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

# இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

———oo———

## 'இலங்கை இந்தியன்' பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும் என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்பத்திரிகை இது ஒன்றே.

2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணகஷ்டத்தையும் பொருட் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதி ...த்திரிகை பாடுபட்டு வருகிறது.

3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மெண்டாலும் இலங்கை கவர்மெண்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.

4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும்உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.

5. பத்திரிகை பிரசுரிப்பதி லேற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!

6. இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை ... தனது தொழிலி லீடுபட்டு சலபமா ...க்சேர்பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறர். ...ர்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறர்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.

"இலங்கை இந்தியன்" மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டாரப் தெரு, கொழும்பு.

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய "இலங்கை இந்தியன்" தமிழ் வாரப் ப...க்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்..........................................

பெயர்..........................................

விலாசம்..........................................

..........................................

**சந்தா விபரம்.**

——o——

| | | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை முதலிய விடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்...

Printed and published for the Proprietor by H. Nelliah B. A. [residing at 97 Maliban St. Colombo] at the 'Ceylon Indian' Printing Works, 107 B. Hulftsdorp Street, Colombo.